பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

செல்லையா
சிவபாதலிங்கம்
தங்க வைர
நகை வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

# உதயன்

விலை ரூபா 3-50

Selliah
Sivapathalingam
GEM & JEWELS MERCHANT
218H, Kasthuriar Road
Jaffna.
T. Phone: 23794

சுடர்: 5 சுக்கில ஞூ மாசி மீ 27 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 13 (11-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 30

### பிரேமா அரசு இராணுவத் தீர்வை நாடாது; ஆனாலும்

# இலங்கை படை தாக்கினால் எதிர்கொள்ள புலிகள் தயார்!

## கிளிநொச்சியில் வைத்து நேற்று உதயனுக்கு அளித்த பேட்டியில் மாத்தயா

கிளிநொச்சி, மார்ச் 11

பிரேமதாஸா அரசாங்கம் ஈழத்தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை நாடாது என்றே நம்புகிறோம். ஆனாலும் தாக்குதல் ஏதும் மேற்கொள்ளப்பட்டால் அதனை எதிர்கொள்ளவும் விடுதலைப் புலிகள் தயார்!

— இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா).

நேற்று மாலை கிளிநொச்சியில் வைத்து உதயனுக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

பேட்டியின் விவரம் வருமாறு:-

கேள்வி: இலங்கை இராணுவம் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் பரவலாக காணப்படுகிறது. இது குறித்து உங்கள் பதில்!

பதில்: இராணுவத் தீர்வை நாடப்போவதிலலை என்பதை விடுதலைப் புலிகள் — அரசு பேச்சுக்களின் போது ஜனாதிபதி பிரேமதாஸா உறுதியாகத் தெரிவித்திருக்கிறார். ஆகவே இராணுவ ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படமாட்டாது என்று நம்புகிறேன்.

கேள்வி: கடந்த 40 வருடங்களாக ஸ்ரீலங்கா அரசுத்தலைவர்கள் ஈழத் தமிழ் மக்களுக்கு இப்படியான பலஉறுதிமொழிகளைத் தந்திருக்கிறார்கள். பின்னர் அவற்றைக் காற்றில் பறக்கவும் விட்டிருக்கிறார்கள். ஆகவே தற்போதைய

(7ஆம் பக்கம் பார்க்க)

### ஏப்ரல் 6ல் பென்ஷன்

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் மாதம் 6ம் திகதி அம்மாதத்திற்குரிய பென்ஷன் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது

முன்னர் பென்ஷன் வழங்குவது ஏப்ரல் 11ஆம் திகதி முதல் இடம்பெறும் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது.



### கிளிநொச்சியில் வரவேற்பு நிகழ்ச்சி

கவின்கலைக் கல்லூரியைத் திறந்து வைப்பதற்காக விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் நேற்று கிளிநொச்சிக்கு வந்திறங்கியபோது எடுக்கப்பட்ட படம். முன்னணியின் தலைவர் மாத்தயா, பொதுச்செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி, வன்னிமாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரன், கவிஞர், காசி ஆனந்தன் ஆகியோர் காணப்படுகின்றனர், (உ)

### ரயில் மறிப்புப் போராட்டம்

## மூப்பனார், சிதம்பரம் உட்பட 3,200 பேர் நேற்று கைது!

சென்னை மார்ச் 11

சென்னையை அடுத்துள்ள மறைமலை நகர் ரயில் நிலையத்திற்கு காமராஜர் பெயரைச் சூட்டும்படி கோரி ரயில் மறிப்புப் போராட்டம் ஒன்றை நேற்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் நடத்தியது.

இப்போராட்டத்தில் கலந்து கொண்ட சுமார் 3 ஆயிரத்து 200 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஏற்கனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக

(7ஆம் பக்கம் பார்க்க)

# உலகத்திற்கே வழிகாட்ட வேண்டும் என்ற வெறி கொண்டவர்கள் விடுதலைப் புலிகள்

## கிளிநொச்சிக் கூட்டத்தில் யோகி உரை

அலுவலகச் செய்தியாளர்கள் எஸ். ராஜ்குமார், ஜே. எல். மரியநாயகம்

கிளிநொச்சி, மார்ச் 11

"உலகத்திற்கே வழிகாட்ட வேண்டும் என்ற வெறி கொண்டவர்கள் புலிகள்"— இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி.

நேற்று மாலை கிளிநொச்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

கூட்டத்திற்கு திரு. வி. வீரசிங்கம் தலைமை வகித்தார்.

திரு. யோகரட்ணம் யோகி தமதுஉரையில் கூறியதாவது:

ஒரு நாட்டினுடைய வளர்ச்சியை, ஒரு இனத்தின் உன்னதமான எழுச்சியை வெளிப்படுத்தி, பிரதிபலித்து நிற்பவை அந்த இனத்தின் கலை, கலாசாரங்கள்.

போராட்டங்கள் நடக்கின்றன. எத்தனையோ கஷ்டங்கள். சாவுக்கு மத்தியிலும் வறுமைக் கோட்டின் எல்லையிலும் மக்கள் அல்லலுறும் போது கூட அவர்களுக்கு வழிகாட்டியாக, அவர்கள் வளர்ச்சிக்கு உதவுபவையாக கலை, கலாசாரங்கள் இருக்க வேண்டும்.

மினி சினிமாக்களை நாம் மூடிவிட்டோம் என்றார்கள். "நீங்கள் ஒரு அரசியற்கட்சி. மினி சினிமாக்களைத் திறக்க

(7ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அக்கரைக்குப் போன அகதியளின்ரை செய்தியள் எல்லாம் ஒரே குழப்பமாய் இருக்கு பாருங்கோ...!

### வவுனியாவில் 9 இளைஞர் விடுவிப்பு

வவுனியா மார்ச் 11

கடந்த வியாழனன்று 9 இளைஞர்கள் விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்டனர்

இந்த 9 இளைஞர்களும் தமிழ் தேசிய இராணுவத்தை சேர்ந்தவர்கள் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது

வவுனியா மாவட்டத்தில் புலிகளிடம் சரணடைந்தவர்களும், அவர்களால் பிடிக்கப்பட்டவர்களும் விசாரணையின்பின் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஒ-16ர)

# கவின்கலைக் கல்லூரி கோலாகலத் திறப்பு!

கிளிநொச்சி மார்ச் 11

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் கலாசாரப் பிரிவினால் கிளிநொச்சியில் ஸ்தாபிக்கப்பட்ட கவின்கலைக்கல்லூரி நேற்று மாலை கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது.

முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா) கவின்கலைக் கல்லூரியை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

நேற்று மாலை கல்லூரித் திறப்பு விழாவில்பங்கு கொள்வதற்காக முன்னணியின்

[7 ஆம் பக்கம்பார்க்க]

# தமிழ் அகதிகள் வருவது பற்றி முதல் நாள் தான் தெரிய வந்தது

## செய்தியாளர் மாநாட்டில் கருணாநிதி

சென்னை, மார்ச் 11

இலங்கையில் இருந்து தமிழ் மக்களை ஏற்றிக்கொண்டு ஹர்ஷவர்த்தனா, திப்பு சுல்தான் ஆகிய இரண்டு கப்பல்கள் சென்னைத் துறைமுகம் வருவது முதல் நாள் தான் மாநில அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனே நான் இது பற்றி மத்திய அரசுடனும் பிரதமருடனும் தொடர்பு கொண்டேன். போராளிக் குழுவினர் சென்னை வந்து இறங்குவதால் ஏற்படக்கூடிய விரும்பத்தகாத பிரச்சினைகளை நான் பிரதமருக்கு எடுத்து விளக்கினேன். அதன் பிறகு அகதிகள் வேறு பகுதிக்கு மாற்றப்பட்டார்கள்.

நேற்றுச் செய்தியாளர்

(7ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

11 - 3 - 1990

ஞாயிற்றுக்கிழமை மாசி 27

சுப நேரம்:
9-23 முதல் 10-53 வரை

ராகுகாலம்:
4-53 முதல் 6-23 வரை

பூரணை விரதம்

## வேலணையில் ஒரே இரவில் 4 வீடுகளில் கொள்ளை

### ஆயுத பாணிகள் அட்டகாசம்

வேலணை, மார்ச் 11

வேலணைப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு நான்கு வீடுகளில் கொள்ளையர்கள் நகைகள் மற்றும் பொருள்களைச் சூறையாடிச் சென்றுள்ளனர் எனத் தெரியவந்தது.

இந்த நான்கு வீடுகளிலும் இருந்தும் பல ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள், கமரா, கூறைச்சேலை போன்றவற்றை கொள்ளையர் அபகரித்துச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொள்ளையர்களிடம் துப்பாக்கி, கிரனேட் போன்றவை இருந்ததாகக் கூறப்பட்டது.

வேலணை கிழக்கு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சி. குணரத்தினம், செ. குலவீரசிங்கம், க. தேவராஜா, குழந்தைவேலு ஆகியோரது

(7ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சியில் நேற்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கூட்டம்



நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும், முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திராஜா [மாத்தயா] உரையாற்றுவதையும், மேடையில் அருகில் முன்னணியினரின் பொதுச் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். [இ]

### சீனக்குடாவில்

## இலங்கை கடற்படையினர் பாதுகாப்புக் கடமையில்

திருகோணமலை, மார்ச் 11

சீனக்குடாவில் இந்தியப் படையினர் வெளியேறிய பகுதியில் இலங்கை கடற்படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வியாழன் முதல் கடற்படையினர் அங்கு காவல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சீனக்குடாவில் கடற்கரையை அண்டிய பிரதேசமான ரி. ரி. ஏ., 'பெர்மா காம்ப்' ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசம் திருமலை துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான பிரதேசம். 1987 செப்டம்பர் மாதம் வரை இங்கு துறைமுக அதிகார சபையின் பிரிவு

(7ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ்

சகல டிசைன்களிலும் அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ் கார்ட்டுகள் விற்பனைக்கு உண்டு. ஸ்ரீ காந் புத்தகசாலை, (பஸ் நிலையம் முன்பாக) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/3486)

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காயம், பீட்ரூட், கோவா விதைகள் விற்பனைக்குண்டு பிள்ளையார், 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (2819)

உடன் விற்பனைக்கு Plat Form Avery- England. Made 5 அந்தர் தராசு சி. நாகலிங்கம், ஸ்ரீ கிருஷ்ணா, மர அரிவு ஆலை, கண்டிவீதி, பளை. (2838)

அல்சேஷன் 7 கிழமை அழகான தனிச்சாதி நாய்க்குட்டிகள் ஒரு ஆண் இரண்டு பெண் உடன் விற்பனைக்கு உண்டு. பழைய நம்பர் 181 கோவில் வீதி, நல்லூர். (12019)

பெண்களுக்குரிய நல்ல நிலையிலுள்ள றலி பைசிக்கிள் (சிறியது) விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் நேரில் பார்த்து வாங்கலாம். முகவரி ''திருவுளம்'' அச்சுக்கூட ஒழுங்கை, ஸ்ரேசன் றோட், கொக்குவில் (2830)

T. V கலர் சோனி 22'' பாவித்தது விற்பனைக்குண்டு ரேடியோ மனுவல்ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். (11975)

நல்ல நிலையிலுள்ள இற்றாலியன் D. L லம்பிறற்றா ஸ்கூட்டர் 6சிறி தொடரிலக்கத்தில்வெள்ளைநிறம்விற்பனைக்குண்டு நேரில்பார்வையிடலாம். பித்தளைத் தொழில் நிலையம் க. ஐயாத்துரை இல 94 நாயன்மார் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (2849)

1g 'Ronson துவிச்சக்ர வண்டி விற்பனைக்குண்டு. 268/5 நாவலர் றோட், ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம். (11981)

8 Sri Peugeot 304 விற்பனைக்கு உண்டு தொடர்பு: 121 Brown Road Jaffna (11974)

பாவித்த கடைகளுக்குரிய சோகேஸ் (கவுண்டர்) குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சரஸ்வதி ஸ்ரோர்ஸ் 55, பெரிய கடை, யாழ்ப்பாணம் (2845)

3 மாத றொடேசியன் றிச்பாக் (Rhodesion Ridge Back) நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பின்வரும் விலாசத்தில் 11- 3- 90 ஞாயிறு காலை 8 மணியிலிருந்து மாலை 2 மணிவரை பார்வையிடலாம். N. N Mariampillai, No. 27, Convent, Road-Lane, Jaffna. (2831)

### 90ஆம் ஆண்டு பஞ்சாங்கம்

இரகுநாதையர் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கம் வியாபாரிகட்கு தொகையாக விசேட கழிவுடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீ காந் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். (சி/3487)

### 90 ஆம் ஆண்டுப் பஞ்சாங்கம்

இரகு வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணிதப் பஞ்சாங்கம் பெரும் திரளாக விற்பனைக்கு உண்டு. தங்களின் சகல ஆவணங்களும் மிகவும் தெளிவாக போட்டோஸ்ரற், எடுத்துக்கொள்ள மக்மிலன் புத்தகசாலை No 3. பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-3977)

### கணிதம்
### மயூரதி வெளியீடுகள்

G. C. E. O/L கணிதம் மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் விற்பனையாகின்றன. ரூ. 17/50, ரூபா 30/- ஆண்டு - 9 கணிதப் பயிற்சி 1 மயூரதி வெளியீடு -6, ரூபா 16-50 பூபாலசிங்கம், ஸ்ரீ லங்கா, ஞானசுரபி, துர்க்கா ஸ்ரேசனர்ஸ் மற்றும் புத்தகசாலைகளில். (2574)

### தேவை

அரச சேவையிலுள்ள ஒரு தம்பதிகளுக்கு சகல வசதிகளும் கொண்ட ஒரு சிறு வீடு யாழ் நகர எல்லைக்குள் வாடகைக்கு உடன் தேவை. விண்ணப்பிக்க. NO. 637 C/O உதயன் (2848)

காசாளர் ஒருவரும், சமையல்காரர் ஒருவரும் உடனடியாக தேவை. இருவரும் ஆண்களாக இருக்க வேண்டும். தொடர்பு யூறப் சைனா ஹோட்டல், 89, 2nd Cross Street, Jaffna. (2835)

அச்சக வேலைகளில் அனுபவமுள்ள எழுத்துக் கோர்க்கத் தெரிந்த வேலைகள் பயில்வதற்கான படித்த பெண் பிள்ளைகள் தேவை. தொடர்பு கொள்ளவும்: ஞானசுரபி புத்தகக் கம்பனி, 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (2836)

புடவை வியாபார ஸ்தாபனத்துக்கு பெண் காசாளர் ஒருவரும், வியாபாரத்தில் அனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. நேரில் வரவும். ஏசியன் ரெக்ஸ்ரைல்ஸ் பலாலி வீதி, திருநெல்வேலி. (2820)

### மணமகன் தேவை

யாழ்ப்பாணம் குருகுலம் கத்தோலிக்க 33 வயது மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. எம்மிடம் எல்லா வகுப்பு மணமக்களும் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (2841)

யாழ்ப்பாண இந்து வேளாள படித்த மணப்பெண்ணுக்கு 30-38 வயதுக்கிடைப்பட்ட டொக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், மணமகனும், யாழ்ப்பாண இந்து வேளாள 30 வயதுப்பெண்ணுக்கு 1500ற்கு மேல் சம்பளம் பெறும் மணமகனும் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (2840)

### மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை சேர்ந்த கத்தோலிக்க உயர் வேளாள குலமகனுக்கு (civil Engineer) பெற்றோர் நல்ல குணமுள்ள அழகான ஓரளவு படித்த பொருத்தமான 32 வயதுக்குட்பட்ட மணமகளை தேடுகின்றனர். ஓரளவு சீதனம் எதிர்பார்க்கப்படுகிறது புகைப்படம் சாதகக் குறிப்பு (இருந்தால்) மற்றைய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.
C/o உதயன். No. 636 (2847)

### SPOKEN ENGLISH

ஆங்கிலம் இலகுவில் பேசப்பழக உதவும் கைநூல்கள் Series 1-7தயாரிப்பு S.B. Iyar கிடைக்குமிடம் 12, வைமன் வீதி, நல்லூர். (11977)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima lohmann சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், றொயிலர் குஞ்சுகள், கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள். Golden Comet Hyline Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11818)

### கோழிக்குஞ்சு விநியோகம் [Uplands Farm]

(Unsexed) தனி சிகப்பு, கறுப்பு சேவல் (பிலிமத்) கறுப்பு வரி சேவல் (lohmann) பிறவுண் சேவல், வெள்ளை கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் (14-3-90) புதன்கிழமை விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9, சந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலைய அருகில்) (2837)

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (சி/3451)

### தேவை

பிரபல வெளிநாட்டு ஸ்தாபனத்திற்கு ஏக விநியோகஸ்தர்களாக இருக்கும் எங்கள் ஸ்தாபனத்திற்கு Working Directors உடன் தேவை. பங்கு வாங்குவதற்கு வசதி உள்ளவர்கள் மாத்திரம் நேரடியாக மனுப்பண்ணவும், நல்ல சம்பளம் கொடுக்கப்படும் Maham Group, 336/49, 336/50 K. K. S. Road Jaffna. (2842)

### மணமகள் தேவை

யாழ் இந்து உயர் குல வேளாள குடும்பத்தைச் சேர்ந்த 30 வயது மது புகைத்தல் அற்ற பொறியியலாளர் [Civilengineerph-D -U.S.A) 7 இல் செவ்வாய் உள்ள 5' 8', உயர மணமகனுக்கு பெற்றோர் டாக்டர் அல்லது தகுதிக்கேற்ற அழகிய மணமகளை தேடுகின்றனர் ஜாதகக் குறிப்புகள் கவனிக்கப்படமாட்டாது தொடர்பு கொள்ளவும் 638 C/O உதயன் (2850)

வேளாள குலத்தைச் சேர்ந்த கனடாவில் Sales Representative ஆக தொழில் புரியும் 37 வயது நிரம்பிய மணமகனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த படித்த மணமகள் தேவை விளம்பர இல-106 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (12024)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் எவ்வகையான பிரச்சினைகளையும் உன்னதமான மட்டக்களப்பு ஆரூட மாந்திரீகமறைப்படி அரச அங்கீகாரம்பெற்றுள்ள பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரால் வெற்றிகரமாய் தீர்வு காணப்படும். தொடர்பு கொள்ளுங்கள்: ''சக்தி சரவணா 210, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (யாழ் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) வியாழன் விடுமுறை. (2832)

### தவறி விட்டன

578390480V இலக்கமுடைய ஜெகதேவி குலசேகரம் என்பவரினதும் ஜெகராணி குலசேகரம் என்பவரினதும் இரு அடையாள அட்டைகள் 6/3/90 அன்று கொழும்பிலிருந்து வந்த யாழ்தேவியில் கொடிகாமத்திற்கு பிரயாணம் செய்தபோது தவறி விட்டன. கண்டெடுப்பவர்கள் 275, டச்றோட், மீசாலை எனும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (2844)

நவாலிக்கும் நாச்சிமார் கோவிலுக்கும் இடையில் பச்சை சிகுபாக்கில் சுற்றப்பட்ட 8000/- ரூபாய் பணம் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் சென்றல் இன்டஸ்ரியல் 930. K. K S. வீதி, நாச்சிமார் கோவிலடி அல்லது கே. ஜி எம். அரசடி றோட், நவாலி என்ற முகவரிக்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம்வழங்கப்படும் (11980)

### Pharmacy Classes Biginners Revision

For Students who wish to aprear for the Pharmacy Exam held by Ceylon medical College Council Classes will be conducted by Qualified Lecturers on Sundays Qualification G. C. E. O/L for Further Details contact Northern pharmacy Hospital Road. Jaffna. (2810)

### இலவசம்

காலஞ்சென்ற நா. மகாதேவன் அவர்களின் நினைவாக பாவித்த புத்தகங்கள் இலவசமாக ஆதாரத்துடன் பெற்றுக்கொள்ளலாம். இதில் கணக்கியல், பொதுஅறிவு, பாடசாலை புத்தகங்கள் அடங்கும். ஞாயிற்றுக்கிழமையும் திங்கட்கிழமையுமே பெறலாம். விபரங்களுக்கு சரஸ்வதிஸ்ரோர்ஸ் (மலாயன்கபே அருகில்)55, பெரிய கடை யாழ்ப்பாணம். (2846)

### புலமைப் பரிசிற் பரீட்சை

ஆண்டு - 5 புலமைப் பரிசிற் பரீட்சை மாதிரி வினாத்தாள் கணிதம்-5, தமிழ்-5 தயாரிப்பு எஸ். எஸ். ஐயர் கிடைக்குமிடம் 9[illegible] தெரு நல்லூர். ([illegible])

# கூடுதல் சஞ்சிகைகள் வெளிவர நிதி உதவி வழங்கவேண்டும்

### ''சமூக ஒளி'' வெளியீட்டில் உரை

யாழ்ப்பாணம் மார்ச் 11

பல்கலைக்கழக மாணவர், கலை அமைப்புக்கள் கூடுதலான சஞ்சிகைகள் வெளியிட நிதிவசதியின்றி உள்ளனர். ஆகவே கூடுதல் உதவி வழங்கப்படவேண்டும்.

யாழ்- பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தால்நடாத்தப்பட்ட சமூக ஒளி சஞ்சிகை வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையில் கலைப்பீடாதிபதி பேராசிரியர்ந. பாலகிருஷ்ணன்இவ்வாறு கூறினார்.

சஞ்சிகையின் முதல் பிரதியை யாழ் -அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் பெற்றார் திரு. இதயசிவதாஸ் தலைமையில் நடந்த இந்த விழாவில் பொருளியற்துறைத் தலைவர் கலாநிதி வி. நித்தியானந்தன் அறிமுகவுரையும், வரலாற்றுத்துறைத்தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் ஆய்வுரையையும் நிகழ்த்தினார்கள். (க-3)

### சின்னம்மா வித்தி மாணவியர் சாதனை

யாழ்ப்பாணம் மார்ச் 11

வட்டுக்கோட்டைக் கொத், தணி அமைப்பிலுள்ள பதினைந்து பாடசாலைகளில் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய ஐந்து மாணவர்களில் இருவர் சின்னம்மா வித்தியாசாலையைச் சார்ந்த செல்விகள் ச. தயாளினி இ. அமுதினி ஆவர். (க)

# ''வினாயகரை வழிபட்டால் துன்பம் மறைந்துவிடும்''

மண்டைதீவு மார்ச் 11

''சைவ மக்கள் எந்த மங்களகரமான செயலில் ஈடுபடும் போதும் வினாயகப் பெருமானை முதலில் வழிபட்ட பின்பே கருமங்களை செய்கின்றார்கள். ஆகவே விநாயகப் பெருமானை தினமும் நாம் வழிபட்டு வந்தால் எங்கள்வாழ்க்கையிலுள்ள துன்பங்கள் எல்லாம் மறைந்து விடும்''

மண்டைதீவு வழிப்பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெற்ற சங்காபிஷேக வைபவத்தில் உரையாற்றிய மண்டைதீவு இந்து இளைஞர் திருமுறைக்கழகச் செயலாளர் திரு. நல்லையா விஜயசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

சிவஸ்ரீசாம் கணேசக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. விஜயசுந்தரம் மேலும் பேசுகையில் மண்டைதீவு நுளை வாயிலில் அமைந்துள்ள வினாயகர் எமது கிராமத்தை காக்கும் காவல் தெய்வமாக விளங்குகின்றார்'' என்று கூறினார். (க - 88)

### இலவச மண் வெட்டி

சாவகச்சேரி மார்ச்11

சாவகச்சேரி கமநலசேவை நிலையத்தில் விவசாயிகளுக்கு மண்வெட்டிகள் இலவசமாக வழங்கப்பட்டன. 32 கிராம சேவகர்கள் பிரிவுகளைச் சேர்ந்த 500 பேர் இம் மண் வெட்டிகளைப் பெற்றுக் கொண்டனர்.

பொறுப்பாக உத்தியோகத்தர் திரு.க. சண்முககநாதன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (க-31)

## 90 வது நாள் நினைவஞ்சலி



**நல்லநாதன் அருள்தாஸ்**

பிறப்பு: 25- 01- 1972    இறப்பு: 07- 12- 1989

ஓ எம் இனிய நண்பா!
தீமையை நினைக்காத உன்னை
தீமையே விழுங்கி விட்டதை
எம்மால் தாங்க முடியவில்லை!
எம்மிடமிருந்துன்னை
நிரந்தரமாய் பிரித்தது!
விதியல்ல சதியே!
நீ இறந்ததை எம் மனம் ஒப்புக்கொள்ளவில்லை
எம்மைப் பொறுத்த வரை
நீ ஜீவிக்கிறாய் எங்கள் மனங்களிலே!!

நண்பர்கள்
(11982)

## 31ஆவது நாள் நினைவஞ்சலி



திருமதி
**இராசரத்தினம் பிலோமினா**

மண்ணில்: 14 - 09 - 1933    விண்ணில் 09 - 02 - 1990

மாறாத அன்பிற்கு தெய்வ மம்மா
சோராத உயர்விற்கு ஏணி யுன்னை
தீராத நோய் வந்து மாய்த்த தம்மா
பாராது போனாயோ எம்மை யம்மா

ஆறாது ஆறாது நெஞ்ச மென்றும்
நீராகப் போனவுன் நெஞ்சை எண்ணி
நூறாண்டு காலமும் எங்களோடு
பாராண்டு வாழுமுன் பாச மம்மா

பிரிவுத் துயரில் பங்குபற்றியும். ஆறுதல் கூறியும் ஆறுதல் செய்திகள் அனுப்பிய யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

அன்புக் கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

''வதிவில்லா''
பிரதான வீதி,
மாதகல். [2764]

## 9 ஆவது மாத நினைவஞ்சலி



செல்வன்
**அ. நிசாந்தன் (நிக்சன்)**

அன்னையின் மடியில்: 15 - 05 - 1971    தாயக மண்ணில்: 08 - 07 - 1989

காயகத்தைக் காக்கும் உமது அஞ்சாமைக்கும் உறுதிக்கும், நிகரில்லா வீரத்திற்கும் நாம் என்றென்றும் தலைவணங்குகின்றோம்.

அம்மா அப்பா என்று அழைக்க யாரும் இல்லையே மகனே!

எம் தொடர்கதையை உம்மோடு முடித்து விட்டீரே மகனே!

இப் பூவுலக வாழ்வைத் துச்சமென மதித்து உமது பச்சிளம் பூ முகத்தை இப் புவிதனில் காணாது மறைத்தீரே மகனே! எம் குலவிளக்கு நீர் மீளாத் துயில் கொண்டதால் இருள் சூழ்ந்ததே எம் வாழ்வு மகனே!!

உம் பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா.

குருசோ லேன்,
கண்டிக்குளி
[2772]

## 1ஆம் ஆண்டு நினைவு தினம்



**திரு. சிமியோன் (தவம்)**

மண்ணிற்கு 03- 08- 1942    விண்ணிற்கு: 11- 03- 1989

ஆறாத்துயர் கொண்டு அழுது நிற்கும் வேளையிலே
யாரெமக்கு துணையென்று எம்மை விட்டு
மறைந்து சென்றீர்
எல்லாம் வல்ல இறைமகனை இப்போதும்
எப்போதும் இறைஞ்சுகின்றோம் நாங்கள்
இறைவனில் நினதான்மா அமைதி பெறட்டும்.

அன்னாரின் ஆன்ம சாந்தி திருப்பலி 11- 03- 90 அன்று தென் கோவையூர் புனித மரியாள் தேவாலயத்தில் காலை 7. 00 மணிக்கு இடம் பெறும்.

மனைவி- பிள்ளைகள்,
சகோதரர், சகோதரிமார்.

இருபாலை,
கோப்பாய் தெற்கு. (2773)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவா உண்டேல் உண்டாம் சிறிது

**பொருள்:**

கீழ்மக்களின் ஆசாரத்திற்குக் காரணமாக இருப்பது அச்சமே; எஞ்சியவற்றில், அவா உண்டானால் அதனாலும் சிறிதளவு ஆசாரம் உண்டாகும்.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

11- 03- 1990 க. பெ இலக்கம் : 23


## நீண்ட கால குறை நீங்குகிறது

**வட** பகுதி மக்கள் கடந்த பல காலங்களாக எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்து வந்தனர். அவற்றுள் போக்குவரத்துக் கஷ்டங்களும் ஒன்று.

ரயில் சேவை அறவே இல்லாத காலங்களில் வட பகுதி மக்கள் தனியார் பஸ்களையே பயன்படுத்தி வந்தனர். கொழும்பு பயணத்தின்போது அவர்கள் அனுபவித்த கஷ்டங்களை எவரும் இலேசில் மறந்துவிட முடியாது.

காலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ் ஏறினால் சில சமயம் 15க்கு மேற்பட்ட சோதனை நிலையங்களில் (Check Points) இறங்கி ஏறும் நிலை இருந்து வந்தது.

சில சோதனை நிலையங்களில் பொதிகளுடன் நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டிய அவல நிலையும் இருந்தது.

ஆயுதப்படையினரின் கெடுபிடிகளால் குறிப்பிட்ட இடத்தை அடையும் வரை பயணம் நிச்சயமற்றதாகவும் இருந்தது. 12 மணித்தியாலங்களுக்கு மேல் நேரத்தை விணடிக்கும் நீண்ட பயணமாகவும் இது இருந்தது.

ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள புதிய அரசியல் சூழ்நிலைகளால் நிலைமை மாற்றம் அடைந்து வருகிறது.

காலை ரயில் சேவையுடன் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இரவு ரயில் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நான்கு வருட இடைவெளியின் பின்னர் இது நடைபெறுகிறது.

1986 மார்ச் 25 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற யாழ் தேவி ரயில் ஓமந்தையில் வைத்து எரிக்கப்பட்டது.

இதனை அடுத்து சுமார் ஒன்றரை வருட காலமாக சகல சேவைகளும் நிறுத்தப்பட்டிருந்தன.

பின்பு 1987 செப்டம்பர் 1 ஆம் திகதி இச்சேவை பெயரளவில் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் அடிக்கடி ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக மக்களுக்குப் பயன்தரும் சேவையாக அமையவில்லை.

தற்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தூதுக்குழுவினர் ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாசாவுடன் நடத்திய பேச்சுக்களின் பயனாக இரவு ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

வடபகுதி மக்கள் இந்த இரவு ரயில் சேவையால் பல நன்மைகளைப் பெற உள்ளனர்.

ஒன்று நேரத்தை மீதப்படுத்துவது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இரவு ரயிலில் புறப்படும் ஒருவர் அதிகாலை கொழும்பை அடைந்து ஒரே தினத்தில் தமது வேலையைப் பூர்த்தி செய்து கொண்டு அன்று ரயிலிலேயே யாழ்ப்பாணத்துக்குத் திரும்ப முடியும். கொழும்பில் இரவில் தங்குவதற்கான இருப்பிடப் பிரச்சினையும் இருக்க மாட்டாது. இதனால் பணச்செலவு குறைகின்றது.

வடபகுதி- கொழும்பு ரயில் சேவை முற்றாக ஸ்தம்பிதம் அடைவதற்கு முன்னர் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் நான்கு ரயில் சேவைகள் இடம் பெற்று வருகின்றன.

தினமும் காலை - நண்பகல் - இரவு மூன்று ரயில்கள் சேவையில் ஈடுபட்டு வந்தன. இதற்குப் புறம்பாக இன்டர் சிற்றி சேவையும் இருந்து வந்தது.

தற்போது இவற்றுக்குப்பதிலாக இரு ரயில் சேவைகளே நடத்தப்படுகின்றன. இன்டர் சிற்றி சேவை ஆரம்பமானால் மூன்று ரயில் சேவைகளாக இது அதிகரிக்கும்.

வடபகுதி மக்களின் நன்மை கருதி நண்பகல் சேவையும் ஆரம்பிக்கப்படுவது அவசியம் ஆகும்.

அதே சமயம் பொதுமக்களிடம் ஒரு பொறுப்புச் சுமத்தப் பட்டுள்ளது:

பெரும் சிரமங்களின் மத்தியில் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ள இந்த ரயில் சேவைகள் மேலும் தொடர பொதுமக்களின் பங்களிப்பு அவசியமானது,

மீண்டும் இவை சீர்குலைவதற்கு எவரும் அனுமதிக்கக் கூடாது.

### கிளிநொச்சியில்

## காணி மாவட்டப் பதிவகம் 14 ஆம் திகதி திறக்கப்படும்

யாழ்ப்பாணம் மார்ச் 11

கிளிநொச்சி காணி மாவட்டப் பதிவகம் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை10 மணிக்கு மாவட்டப் பதிவாளரான அரசாங்க அதிபர் திரு. க மாணிக்கவாசகரால் திறந்து வைக்கப்படும்.

விவாகப் பிறப்பு இறப்புப் பதிவேட்டை மாவட்ட மேலதிகப்பதிவாளரான மேலதிக அரசாங்க அதிபர்திரு. சொ. அமிர்தலிங்கமும்காணிப் பதிவேட்டை மேலதிக அரசாங்க அதிபரான திரு. க. துரைராசாவும் ஆரம்பித்துவைப்பார்கள்.

மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு. க. இராசதுரை வரவேற்புரை நிகழ்த்துவார். கிளிநொச்சி மாவட்டப் பதிவாளர் சார்பில் திரு. க. அருளம்பலம் உரை நிகழ்த்துவார்.

கிளிநொச்சி காணி மேலதி. மாவட்டப்பதிவாளர் திரு. ந சதாசிவ ஐயர் நன்றியுரை கூறுவார். (க)

## சொற்பொழிவு

காரைநகர் மணிவாசகர் சபையின் 50 ஆம் ஆண்டு பொன்விழா தொடர்பான சமயச் சொற்பொழிவு காரைநகர் வியாவில் ஐயனார் கோவிலில் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

### யாழ் மாவட்டத்தில்

## யுனிசெப் பல திட்டங்களை நடைமுறைப் படுத்தும்

யாழ்ப்பாணம் மார்ச் 11

யுனிசெப் நிறுவனம் யாழ் மாவட்டத்தில் பல திட்டங்களை நடைமுறைப்படுத்த இருக்கிறது.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த யுனிசெப் திட்டமிடல் அதிகாரி திரு. கை. வி. ஸ்கன்லென், திரு. வோல்டர் சேருதிரா, திரு. மனோராஜசிங்கம் ஆகியோர் பல திட்டங்களைப் பார்வையிட்டனர்.

கல்வித் திணைக்கள முறைசாராப்பிரிவு, பாலர் பாடசாலைகள், மாநகரசபை திட்டங்கள் ஆகியவற்றை இவர்கள் பார்வையிட்டனர்.

யாழ் அரசாங்க செயலக அதிகாரிகளுடனும் இவர்கள் பேச்சு நடாத்தினார்கள்.

யாழ் மாவட்டத்தில் மலசலகூடம், குடிநீர் திட்டம் ஆகியவற்றை வழங்க இவர்கள் சம்மதம் அளித்துள்ளனர்.

## அந்த 'பொறிக்கிடங்குகள்' என்ன?

கொழும்பு மார்ச் 11

வடக்கு - கிழக்கு மாகாண சபையை கலைப்பதற்குத் தடையாக உள்ள அரசமைப்பு ரீதியான ''பொறிக்கிடங்குகள்'' என்ன என்று சொல்ல மாட்டேன்.

இப்படி அமைச்சர் விஜேரத்னா நேற்று முன்தினம நடந்த செய்தியாளர் மாநாட்டில் சொன்னார்.

''அந்தப்பொறிக்கிடங்குகள் என்ன என்பது இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. பொறிக்கிடங்குகளை அகற்றிபபின்னர் அவற்றைப்பற்றிய தகவல்கள் வெளியிடப்படும்.

இப்படி அமைச்சர் விஜேரத்னா மேலும் சொன்னார்.

## இலங்கைத்தமிழ் நாவல்களில் யதார்த்த நெறி

கொழும்பு மார்ச் 11

இந்துசமய கலாசார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் தமிழ் அலுவல்கள் பிரிவின் ஏற்பாட்டில் ''இலங்கைத்தமிழ் நாவல்களில் யதார்த்த நெறி'' என்னும் தலைப்பிலான ஆய்வுரை, எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 4. 15 மணிக்கு கொம்பனித் தெரு, வொக்ஸ்ஷோல் வீதியிலுள்ள இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கட்டிடத்தில் 14 ஆவது மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. என். சுப்பிரமணியன் இவ்வுரையை நிகழ்த்துவார்.

இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் நிகழ்ச்சியை நெறிப்படுத்துவார். (இ)

### யாழ் பொலிஸ் பிரிவில்

## முறைப்பாட்டுப் பிரதிகள் உடனுக்குடன் வழங்கப்படுகின்றன

யாழ்ப்பாணம் மார்ச் 11

அவசர தேவைகளுக்காக பொதுமக்கள்செய்யும்முறைப்பாடுகளுக்கான முறைப்பாட்டுப் பிரதிகள் உடனடியாக யாழ். பொலீஸ் பிரிவினால் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கான நடவடிக்கைகளை முறைப்பாடுகளுக்குப் பொறுப்பான பொலீஸ் உயர் அதிகாரி மேற்கொண்டுள்ளார்.

அடையாள அட்டை சம்பந்தமாகவோ அல்லது இராணுவநடவடிக்கைகள் சம்பந்தமாகவோ வழங்கப்படும் முறைப்பாடுகளுக்கே உடனடியாகமுறைப்பாட்டுப் பிரதிகள் வழங்கப்படுகின்றன.

தினமும் இவ்வாறு நாற்பதுக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் தமக்கு வந்துசேர்வதாக இந்த அதிகாரி தெரிவித்தார்.

இவற்றைத் தவிர ஏனைய முறைப்பாடுகளை நேரடியாக பொலிஸ் நிலையம் சென்று பதிந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

### நித்தம்புவையில் தோண்டி எடுத்த

## 12 பேரின் சடலங்கள் தொடர்பாக விசாரணை

கடந்த வாரம் நித்தம்புவையில் தோண்டி எடுக்கப்பட்ட ஒரு இளம்பெண் உட்பட 12 பேரின் சடலங்கள் தொடர்பாக பூரண விசாரணை ஒன்றுக்கு பாதுகாப்புத்துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா உத்தரவிட்டார்.

விசாரணையில் தெரியவந்ததாவது;

சென்ற மாதக் கடைசியில் முகமூடி அணிந்த துப்பாக்கி மனிதர்கள் பாதுகாப்புப் படையினர் என்று கூறியபடி வீடுகளுக்குள் புகுந்து இந்த 12 பேரையும் வாகனங்களில் ஏற்றிக்கொண்டு சென்றனர்.

இவர்களை காட்டுக்கு அழைத்துச் சென்ற கோஷ்டி அனைவரையும் நிர்வாணமாக வரிசையாக நிற்கச் சொல்லி சுட்டனராம். பின்னர் சடலங்கள் எரிக்கப்பட்டு புதைக்கப் பட்டன.

சடலங்கள் மீதான வைத்திய பரிசோதனை நேற்று முன்தினம் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியினால் நடத்தப் பட்டது.

இப் பயங்கரக் கொலைகள் பற்றி நடாளுமன்றத்தில் சுதந்திரக் கட்சி எம். பி. திரு. பிரதீப் ஹப்பன்கம பிரஸ்தாபித்தார்.

''முகமூடி மனிதர்கள் கூட்டிச்சென்றவர்களில் ஓர் இளைஞன் அதிஷ்டவசமாகத் தப்பி விட்டார். அவர் இந்தக் குரூரக் கொலைகளை கண்டிருக்கிறார்'' - அந்த இளைஞர் எனது பாதுகாப்பிலிருக்கிறார் என்று திரு. ஹப்பன்கம நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். (இ-எ)

### வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு

## ஒட்டுப் பலகைக் கூட்டுத்தாபன பங்குகளை விற்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 11

பல வருடங்களாக நட்டத்தில் இயங்கிவரும் இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தின் பங்குகள் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்கப்படும். கைத்தொழில் அமைச்சின் தீர்மானத்துக்கமைய அரசு அவுஸ்ரேலிய, மத்திய கிழக்கு கம்பனிகளுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதுஎன கைத்தொழில் அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாமல் போனதால் அண்மையில் தற்காலிகமாக மூடப்பட்ட இக்கூட்டுத்தாபனம் தற்போது திறக்கப்பட்டுள்ளது. இலங்கை வங்கியிடம் இருந்து பெற்ற 20 கோடி ரூபா கடனை இக்கூட்டுத்தாபனத்தால் கொடுக்க [illegible] இதனால் இலங்கை வங்கி கடன் கொடுக்க [illegible] அடுத்து ஊழியர்களின் சம்பளத்தை கொடுக்க முடியாமல்போனது. 1942 ம் ஆண்டு தொடக்கம் நட்டத்திலேயே இயங்கிவரும் இக்கூட்டுத்தாபனத்தில் 2 ஆயிரத்து 300 பேர் பணியாற்றுகின்றனர்.

அதே நேரம் இக்கூட்டுத்தாபனத்தினால் 4 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் மலேசியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 12 ஆயிரம் கன அடி மரங்கள் இற்றுப்போகத் தொடங்கியுள்ளன. தேயிலை பெட்டிகளை தயாரிப்பதற்கு என கொண்டு வரப்பட்ட மரங்களே இவையாகும். அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் தேயிலை பெட்டிகளை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனத்திடம் இருந்து கொள்வனவு செய்யாமல் தனியார் துறையிடம் இருந்து கொள்வனவு செய்வதினாலேயே இம்மரங் [illegible] மல் இருக்கிறது எனவும் அவ் [illegible] (க- து)

## சுதேசிய திருநாள் விழா

யாழ்ப்பாணம் மார்ச்11

ஏழு வருட காலம் தடைப்பட்டிருந்த சுதேசிய திருநாள் கொண்டாட்டம் வழமைபோல் சித்திரை புத்தாண்டுத் தினத்தில் அரியாலை சனசமூக நிலைய மைதானத்திலும், நிலைய சாரிப்பிள்ளை அரங்கிலும் நடைபெறவுள்ளது.

இந்த விழாவை முன்னிட்டு மாவட்ட ரீதியிலான பல போட்டிகள் நடைபெறவுள்ளன. மரதன் ஓட்டப் போட்டி, உதைப்பந்தாட்டம், மின் ஒளியில் கரப்பந்தாட்டம், வலைபந்தாட்டம், மென்பந்துக் கிரிக்கெட் போட்டி என்பனவும், விழா நடைபெறும் தினத்தில் மெய்வல்லுனர் போட்டிகளும், சயிறுழுத்தல் போட்டிகளும், சிறுவர் வளர்ந்தோருக்கான விநோத உடைப் போட்டியும் நடைபெறவுள்ளன.

இரவு பரிசளிப்பு வைபவமும், நாடகமும், ராஜன் இசைக் குழுவினரின் ''தேன் மழை இசை'' சிறப்பு இசை நிகழ்ச்சியும் இடம் பெறும். (க)

## சித்தி

மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் எழுவர் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் சோதனையில் சித்தியடைந்துள்ளனர்.

ஜெ. அமுதன், ந. நிரஞ்சலா, தி. முரளி, கு. சதீஸ் சி. ஜெயமுருகவேல், வே. நந்வகுமார், இ. கிரிதரன் ஆகியோரே சித்தியடைந்த மாணவர்கள் ஆவர்.

## நாணய மாற்று விகிதம்

9-3-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 233.48 | 234.45 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.60 | 4002.35 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுன்ட் | 6553 62 | 6573.38 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2346.92 | 2360.52 |
| 100 | பிரெஞ்சு பிராங் | 692.42 | 699.72 |
| 100 | ஜப்பானிய யென் | 26.4037 | 26 5754 |

### அளவெட்டி வடக்கில்

## கால்நடை கோமாரித் தடுப்பூசி 13 ஆம் திகதி போடப்படும்

காங்கேசன்துறை மார்ச் 11

அளவெட்டி வடக்குப் பகுதியில் இம்மாதம் 13 ம் திகதி கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட உள்ளது.

அண்மைக் காலமாம வலி வடக்குப் பகுதியில் கோமாரி நோய் தாக்கி அநேக கால்நடைகள் பாதிக்கப்பட்டமையால் தடுப்பூசி ஏற்றும் வேலைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாக கோமாரி நோய் கால்நடைகளை பீடிப்பது குறைந்திருந்தது.

ஆனால் தற்போது அளவெட்டி வடக்கு பெரியதம்பிரான் கோவிலடிப் பகுதியில் சில கால்நடைகளுக்கு இந்நோய் கண்டுள்ளதாக தெல்லிப்பழை கால்நடை வைத்திய அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அப்பகுதியிலும், சுற்றாடலிலும் உள்ள கால்நடைகளுக்கு இம்மாதம் 13 ம் திகதி இலவச கோமாரி தடுப்பூசியை ஏற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-68)

## மகோற்சவம்

குருநகர், மார்ச்11

தென்- புலோலி முதலியம்பாள் என வழங்கும் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 28- ஆம் திகதி புதன் கிழமை நடைபெற்ற கொடியேற்ற வைபத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றது.

9 ஆம் திகதிர தோற்சவமும், 10 ஆம் திகதி மாசி மகத்தன்று தீர்த்தோற்சவமும் விமரிசையாக நடைபெறுற்றன. (க-51)

## அந்தோனியாருக்கு நேர்ந்து போட்ட வலையில்...

குருநகர்,மார்ச் 11

பாலைதீவு, அந்தோனியாருக்குஎன்றுநேர்ந்து போட்டவலையில்சுமார் ஏழாயிரம் ''ஊளர்'' மீன்கள் அகப்பட்டன.

கடந்த 3 ஆம் திகதி சனிக்கிழமை கோவிலை அண்மித்த கடலில் போடப்பட்ட வலையிலேயே இவ்வாறு பெரும் தொகையான மீன்கள் அகப்பட்டன. என்று தெரிவிக்கப் படுகிறது.

அகப்பட்ட மீனின் அரைவாசி கோவிலில் தங்கி இருந்த யாத்திரிகர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

மிகுதி குருநகருக்குக் கொண்டு வரப்பட்டுசந்தைப் படுத்தப்பட்டதில் கோவிலுக்கு 27 ஆயிரம் ரூபா சேர்ந்தாகத் தெரிகிறது. (இ-51)

## வாசகர் திருமுகம்

### வீதித் துப்புரவு

அண்மையில் யாழ் மாநகர சபை விசேட ஆணையாளரால் ஒழுங்கு செய்யப்படவுள்ள வீதிகளில் குப்பை கூளங்களை கண்டபடி போடாமலிருக்கும் தீர்மானங்களை வரவேற்கிறேன். இத் திட்டங்களை குறிப்பிடப்பட்ட வீதிகளுக்கு மாத்திரம் நடைமுறைப்படுத்தாமல் யாழ் மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட சகல வீதிகளுக்கும் நடைமுறைப்படுத்துவது நல்லது என்று கருதுகிறேன்.

விடுகளில் சேரும் குப்பை கூளங்களை அள்ளி மதிலுக்கு மேலாக வீதிகளில் போடுவது விரும்பத்தக்க செயலல்ல. ஆனால் மக்களுக்கு இப்படிச் செய்வது வழக்கமாய் விட்டது. ஆகவே இப் பழக்கத்தை தடை செய்வதுடன் உங்கள் வேண்டுகோளை உதாசினம் செய்யும் விட்டுச் சொந்தக்காரர்களுக்கு அந்தந்த இடத்திலேயே வைத்து அபராதம் விதிப்பது இப்படிப்பட்ட பழக்கத்தை நிற்பாட்ட வழி செய்யும். இந்த நடவடிக்கையை கடைப்பிடித்தால் வீதிகள் துப்பரவாகவும் அழகாகவும் காட்சி தருவதுடன் நுளம்பு வகைகளின் உற்பத்தியும் குறையும். இதுபோன்ற நடவடிக்கை சிங்கப்பூரில் நடைமுறையில் உள்ளது என்பதை இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

லயன் வ. பரமசிவம்.
நல்லூர்.

### ரயில்வே கடவை

அண்மையில் ஸ்ரான்லி வீதியில் உள்ள ரெயில்வே கடவையை அண்மித்தபோது தூரத்தே ரயில் வந்துகொண்டிருந்தது. ரயில் வருவதை அறிந்து ரயில் கடவையை மறிப்பதற்கு அங்கு எவரும் இருக்கவில்லை. இதனால் ரயிலும் வந்து கொண்டிருந்தது மக்களும் பாதையை கடந்து சென்று கொண்டிருந்தனர்.

எனினும் ரயில் வருவதை அறிந்து நான் எனது மோட்டார் சைக்கிளை திடீரென நிறுத்துவதற்குள் பின்னால் வந்த சைக்கிள் ஒன்று எனது மோட்டார் சைக்கிளுடன் மோதிவிட்டது. எனினும் பெரிய விபத்தில் இருந்து தப்பித்துக் கொண்டேன்.

ரயில் வரப்போகிறது என்று தெரிவிக்கப்படும் முன் தடுப்புகள் இல்லாததே இதற்கு காரணமாகும். பொதுமக்கள் நன்மை கருதி அதற்குரிய நடவடிக்கையை ரயில்வேத் திணைக்களம் மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

ரி. கே. சிங்கம்.
யாழ்ப்பாணம்.

## கருத்தரங்கு

சாவகச்சேரி, மார்ச் 11

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் அபிவிருத்திகள் பற்றிய மாதாந்தக் கருத்தரங்கு தெய்வேந்திரா தியேட்டரில் அண்மையில் நடைபெற்றது.

## கண்டதும் கேட்டதும்

பவுணைப் பவுணால் ஒட்ட முடியாது தாலிக்கொடி ஒட்டும்போது அதனைப் பவுணால் உருக்கி ஒட்ட முடியாது. ஒட்டும் உலோகத்தின் பெயர் பொடி விளங்கம் என்பதாகும். இது பித்தளை, துத்தநாகம், பவுண், செம்பு என்பவை சேர்ந்த ஒரு கலவையாகும்.

தாலிக் கொடியை ஒட்டும் போது இக்கலவையே உபயோகிக்கப்படுகின்றது. இக்கலவை தாலிக்கொடியில் 3 மஞ்சாடிகள் அளவாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இதன் பெறுமதி இலாபக் கணக்கில் சேரும்!

ஒரு நகைக் கடைக்காரருடன் இது சம்பந்தமாகக் கதைக்கும் போது பின்வருமாறு சொன்னார் தாலிக்கொடி உருக்கும் போது குறிப்பிட்ட வெப்பத்துக்கு மேல் போகாது இருக்க வேண்டும். சில சமயங்களில் தாலிப் பவுண் உருகிப் பெரும் நஷ்டத்துக்கு உள்ளான பொற்கொல்லர்களும் உண்டு.

இதனால்பொடிவிளங்கம்என்பது ஒருஆறுதல்பரிசு எப்படி இருக்கிறது செய்தி!

-செய்திலோலன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




[சி–8462]


## கைதடி கொத்தணி போட்டிகள்

சாவகச்சேரி மார்ச் 11

கைதடி கொத்தணிப்பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டிகள் கைதடி நவீல்ட் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கொத்தணி அதிபர் திரு. சோ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நடைபெற்ற சகல பிரிவு உடற்பயிற்சிப் போட்டிகளிலும் ஆறு குழுவிலும் நாவற்குழி மகாவித்தியாலயம் முதலாவது இடத்தைப் பெற்றது.

(க– 31)

## வ. பி. போ. ச. குழு வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 11

காரைநகர் இந்துக்கல்லூரி மைதானத்தில் காரை. விளையாட்டுக் கழகத்தினருடன் நடைபெற்ற சினேக பூர்வ உதை பந்தாட்டப் போட்டியில் கரைநகர் போக்குவரத்து சபைக்குழு 4-0 என்ற நிலையில் வெற்றி பெற்றது.

## வெங்காய செய்கையில் நஷ்டம்

சுழிபுரம் மார்ச் 11

சுழிபுரம் பண்ணாகம் ஆகிய கிராமங்களில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

விளைச்சல் குறைவாக உள்ளது. அதேவேளையில் விளைந்த வெங்காயத்தையும் விற்க முடியாதிருக்கிறது. வெங்காய வேலைக்கான கூலியும் அதிகரித்துள்ளது. ஒரு அந்தர் வெங்காயம் அறுக்க 120 ரூபா செலவு செய்ய வேண்டியுள்ளது. ஆனால் ஒரு அந்தர் வெங்காயம் 200 முதல் 300 ரூபா வரையே விலை போகின்றது எனவும் தெரிய வருகின்றது.

( க – 28 )

## பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி ஆரம்பம்

சாவகச்சேரி மார்ச் 11

அறவழிப் போராட்டக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நான்காவது பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான பயிற்சி நெறியின் ஆரம்ப வைபவத்தை வைத்திய கலாநிதி திரு. பே. பிலிப்பு மங்களவிளக்கேற்றித் தொடக் வைத்தார்.

குழுவினரின்பணிமனையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட காந்தி நினைவுமண்டபத்தில் குழுவின் தலைவர் திரு. வி. எஸ் துரைராசா தலைமையில்வைபவம் இடம்பெற்றது.

கல்வி இயக்குனர் நவீல்ட் துணை அதிபர் திரு. க. கோபாலகிருஷ்ணனின் ஆரம்ப உரையை அடுத்து அகதிகள் புனர் வாழ்வுக் கழகத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆசி உரை வழங்கினார்.

குழுவின் செயலதிபர் திரு க. ஜீவகதாஸ் நன்றி உரை கூறியதுடன் இவ் வைபவம் நிறை வெய்தியது.

(க–31)


## பெண் நெசவாளர் தேவை

மின்தறியில் அனுவபம் உள்ளவர்கட்கு மாதம் 1000 ரூபாவிற்கு மேல் சம்பளமும் பயிற்சி பெற விரும்புவோருக்கு மாதம் 450 ரூபா சம்பளமும் வழங்கப்படும்.

14-03-1990 காலை 9 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

**சீமா சில்க் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்**

(அரசாங்க விவசாயப்பாடசாலைக்கு முன்பாக)

பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (C/3439)



பகுதி நேர [Part Time]

## அச்சக ஊழியர் தேவை

கொம்போஷிங் – பைன்டிங் – கட்டிங்

மற்றும் சகல அச்சக வேலைகளிலும் அனுபவம் உள்ளவர்கள் பகுதிநேர வேலைக்குத் தேவை.

வேலைநேரம்: பிற்பகல் 5.30 – நள்ளிரவு 12.00 மணி

அல்லது ஒப்பந்த அடிப்படையில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

வேலை நாட்கள்: மாலை 5.00 – 7.00 மணி
சனி/ஞாயிறு: காலை 9.00 – மாலை 6.00 மணி

இல: 15, 2ம் ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



## கம்பி ஆணிகள்

## விநியோகஸ்தர் தேவை

கம்பி ஆணி உற்பத்தி செய்யும் எமது நிறுவனத்திற்கு வடக்கு-கிழக்கு பகுதியில் விநியோகஸ்தர்களை பிரபல விற்பனையாளர்கள் மத்தியில் இருந்து நியமிக்க அக்கறை கொண்டுள்ளோம்.

எமக்குத் தேவைப்படும் விநியோகஸ்தர்களிடம் போதுமான ஸ்டோர் வசதிகள், வாகனம் ஆகியன இருக்க வேண்டும். வங்கி உத்தரவாதம் தரக்கூடியவர்களாகவும் அவர்கள் இருக்கவேண்டும்.

இவ்விளம்பரம் வெளியான தினத்தில் இருந்து அடுத்து வரும் ஏழு நாட்களுக்குள் விண்ணப்பங்கள்;

TO
**DIRECTOR,**
**MACKWOODS METAL PRODUCTS (PVT) LTD.**
**P.O. BOX, 91, COLOMBO.**

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(சகல விண்ணப்பங்களும் ஆங்கிலத்திலேயே அனுப்பி வைக்கப்படல் வேண்டும்)



O/L 1990 (March)
மாணவர்களுக்கு

## இலவச பயிற்சி பரீட்சை

1. பரீட்சைகள் இலவசமாக நடாத்தப்படும்.
2. இவ்வருடம் காலம் போதாததால் மாணவர்களுக்கு [கணிதம், விஞ்ஞானம்] இரண்டு பாடமும் மட்டுமே நடாத்தப்படும். பரீட்சை பின்போடப்பட்டால் அனைத்து பாடங்களும் நடைபெறும்.
3. O/L பரீட்சைக்கு புதிய பழைய பாடத்திட்டத்தின் படி தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் இப்பரீட்சையில் தோற்றலாம்.
4. (March) 12 ஆம் திகதிக்கு முன்னர் நிறுவனத்தின் காரியாலயத்தில் சுட்டெண்ணை அடையாள அட்டை காட்டி பெற்றுக் கொள்ள வேண்டும்.
5. பரீட்சைக்கான நேர அட்டவணை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

Free Exam Unit

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

Red - No — 12141

[சி–3953]


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி

**கோமளாதேவி நடராசா**

(யாழ்/வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவி)

தோற்றம்:- 5 - 9 - 1967  மறைவு:- 25 - 1 - 1990

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
இன்று அந்தியட்டி வீட்டுக்கிரியை நடைபெறும்

உங்கள் பிரிவால் துயருறும்
அப்பா. அம்மா, தங்கை,
தம்பி, அப்பப்பா, அப்பம்மா,
மற்றும் உறவினர்கள்.

இராசபவனம்,
வேலணை– 2.

(11950)

## 750 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்:
18- 09- 1962

ஓ

மறைவு:
06- 02- 1988



**செல்வன் A. கந்தசாமி முரளிதரன்** [redacted]

(த. ஈ. வி. புலிகளின் முன்னாள் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர்)

**பிரசாத்**

எங்கள் அருமைப் பேரனும், மகனும், சகோதரனும், மைத்துனனும், சிறிய தகப்பனும் ஆகிய முரளி 6– 2– 1988 இராணுவச் சுற்றிவளைப்பில் வீரமரணம் எய்தினார்.


அன்னாரின் இறுதிச் சடங்குகளில் பங்கு கொண்டவர்களுக்கும், இராணுவக் கெடுபிடியையும் உதாசீனம் செய்து இறுதிச்சடங்கிற்குத் தேவையான உதவிகளையும் ஒத்தாசைகளையும் புரிந்தவர்களுக்கும், இரங்கல் உரை ஆற்றியவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எங்கள் நன்றியை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். முழுக்குடும்பமும் சிதறடிக்கப்பட்டதனால் காலம் தடைப்பட்டது.

இங்ஙனம்:
அன்னாரின் பிரிவால் துயருறும்:
பேத்தியார் தாய், சகோதரர்கள்,
தங்கை, லண்டன் சித்தப்பா, சித்தி குடும்பத்தினர்,
அண்ணி, மைத்துனி, பெறாமக்கள்,

அஜந்தா,
மூளாய், சுழிபுரம்.

(2754)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. துரைசாமி முருகேசு சிவபாதம்**

பிறப்பு
28. 10: 1956

இலட்சிய மரணம்
11. 03. 1988

நண்பன் என்றும் மடிந்திட மாட்டான்
என்று கூறிடும் சொல்லுண்மையல்ல;
நம்முடன் அவன் இனி இருப்பதும் இல்லை
நம்முடன் அவனது உறவுகள் இல்லை
காரினில் சவாரி செய்திடும் காளை
அவன் நம் அருகே அமர்வதும் இல்லை
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மகள், மகன், அப்பா, அம்மா,
சகோதரர்கள், சகோதரிகள், மாமா, மாமி
மைத்துனர்கள், மைத்துனிகள், பெறாமக்கள், உறவினர், நண்பர்கள்.

'' சிவபாத பவனம் ''
6ம் வட்டாரம்
மயிலிட்டித்துறை.

(2742)


# Jaffna College Institute of Technology

Vaddukoddai

## VACANCIES

Applications are invited from suitable qualified candidates for the following posts.

### 1. Assistant Lecturer

Dept. of Electrical & Electronics Engineering

(Full - Time or Part - Time)

**Qualification:** B.sc. Eng. (Electrical) degree from a recognised University with at least 2 years post qualification experience.

OR

B. Sc. (Double Maths & Physics) and Part I & II A of Engineering Council Examinations with two years post qualification experience in Industry or teaching technical subjects.

### 2. Librarian

**Qualification:** Preferably with a degree of a recognised University and intermediate in Librarian ship.

**Salary:** Negotiable, depending on qualification and experience.

**Apply with Full - Bio - Data to**

**Director**

**Jaffna College Institute of Technology,**
**Vaddukoddai.**

**On or Before 16 th March 1990**

[C/3980]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

10—3—90 சனிக்கிழமை நடைபெற இருந்த இமையாணன் கலைமகள் சனசமூக நிலைய அபிவிருத்திக்கான அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி காரணமாக எதிர்வரும் 31-03-90க்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

மேற்படி சீட்டிழுப்பு 31-03-90 சனிக்கிழமை பி. ப. 2 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

இங்ஙனம்
கலைமகள் ச. ச. நிலைய நிர்வாகம்
உடுப்பிட்டி. (2766)


## 4ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர்
### ஐயாத்துரை கிருபாகரன்
(நீதிபதி)

நீதித் துறைக்கு நிலையான தொண்டு செய்து
சோதிச்சுடராய் மாந்தரில்—ஒதரிய
ஒழுககம் விழிப்பம் உண்மை நடுநிலமை
இழுக்கா தியன்ற மகன்.
கேடுறு மதியோர் கொண்ட
கீழ்மைசேர் போரில் உந்தன்
பீடுறு மேன்மை எல்லாம்
பெற்ற பொன்னாட்டுக் கீந்தாய்
வாடிய உன் உறவோர் மாய
வரித்தி உன் உயிர் பறித்தார்.
மேடுயர் புகழில் தோயும்
மேன்மை கொள் கிருபாகரனே.

உமது பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
சகோதார், உற்றார்.
உறவினர்.
பன்னாலை,
தெல்லிப்பழை
(2758)


## மாங்கல்யா திருமணசேவை

உங்கள் பிள்ளைகளுக்கேற்ற மணமகன் / மணமகளைத் தேர்ந்தெடுப்பதற்கு எமது திருமண சேவையுடன் தொடர்புகொள்ளவும்.

1. யாழ் இந்து வேளாள I. C. M. A. படித்துக்கொண்டிருக்கும் 22 வயதுடைய அழகிய பெண்ணுக்கு டாக்டர் தேவை. டாக்டருக்குப் படித்துக்கொண்டிருப்பவர்களும் விரும்பத்தக்கது.

2. கணக்காளராகப் பணிபுரியும் இந்து வேளாள 38 வயதுடையவருக்கு அழகிய பெண் தேவை.

"மாங்கல்யா திருமண சேவை"
இல. 81/1 பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: மாங்கல்யா திருமண சேவைக்கு வேறு எந்த வித கிளைகளும் கிடையாது. (12026)



இதோ
## உடனடிப் பயணம்
### ★ சவூதி அரேபியா

தொடர்பு கொண்டு 15 நாட்களில்
உறுதிப்படுத்தப்பட்ட பயணம்

* பின்வரும் வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆட்கள் தேவை.
★ பாஸ்போட் 6 படங்களுடன் மற்றும் சான்றிதழ்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| லேபரர் | 500 | SR |
| ஜெனிற்றர் | 500 | SR |
| சுப்பவைசர் | 650 | SR |

(உணவு, இருப்பிடம் இலவசம்)

எதிர்வரும் 12ந் திகதி திங்கட்கிழமை கொழும்பில் வெளிநாட்டுப் பிரதிநிதியால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் கொழும்புக்குச் செல்லக் கூடிய ஆயத்தத்துடன் எம்மை எமது அலுவலகத்தில் சந்திக்கவும்.

18ம், 19ம் திகதிகளில் உதயனில் எம்மால் விளம்பரப்படுத்தப்பட்ட வெற்றிடங்களிற்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் 14ந் திகதி புதன் கிழமை பயணமாக இருக்கின்றனர். நேர்முகப் பரீட்சைக்குச் செல்லும் போது அவர்களை நேரில் சந்திக்கலாம்.

(முற்பணம் அறவிடப்படமாட்டாது)

### 156, 1ம் குறுக்குத் தெரு,
### யாழ்ப்பாணம்.
(யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக)

பணிப்பெண்களாகச் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

முஸ்லீம் பணிப்பெண்களுக்கு இலவச பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

(1 கிழமைக்குள் பயணம் மேற்கொள்ளலாம்)

● கடந்த இரண்டு மாதங்களுக்குள் எமது காரியாலயத்தாலும் எமது தலைமைக் காரியாலயத்தாலும் பயணம் மேற்கொண்டோர்.

(C/3988)


## கோப்பாயில் சட்டவிரோத மின்பாவனை

கோப்பாய் மார்ச் 11

கோப்பாய் உப அபிவிருத்திசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் சட்டவிரோத மின்சார பாவனையாளர் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பெரும்பாலானவர்கள் இரவு வேளைகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று நீரிறைக்கும் மோட்டர்களை இயக்கிவருகின்றனர் என்று கூறப்படுகிறது.

(இ- 72)

## சித்த ஆயுள்வேத அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம் மார்ச் 11

லங்கா சித்தஆயுள் வேதக் கல்லூரியின் அதிபர் இக் கல்லூரியின் பழைய மாணவர் மன்றம் ஒன்றை அமைக்கும் படி வேண்டுகோள் விடுத்துள்ளார்

பழைய மாணவர்கள் எதிர்நோக்கும் பதிவும் பிரச்சனை உட்பட்ட கல்லூரியின் பல்வேறு பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பழைய மாணவர்கள் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இது விடயமாசத் தம்மை கல்லூரி நரட்களில் காலை 11 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை சந்திக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் மார்ச் 11

"வங்கியியல் சட்டமும் நடைமுறைகளும்" என்ற நூலின் வெளியீடு, இன்று தி+தி ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு மானிப்பாய் மகளிர்கல்லூரியில் நடைபெறும்.

திரு. துரைசிங்கம் ரகு எழுதிய இந்நூலின் வெளியீட்டு விழாவுக்கு திரு. க. குணரத்தினம் சட்டத்தரணி தலைமை வகிப்பார். யாழ். மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர் திரு. ஆர். அருளானந்தன் விழாவில் பிரதமவிருத்தினராகக்கலந்து உரை ஆற்றுவார். (க)

## கண்காட்சி

யாழ்ப்பாணம் மார்ச் 11

உலகப் பண்பாட்டு இயக்கத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவு மாநாட்டை ஒட்டி ஈழத்து நாவல்கள், பத்திரிகைகள், சிற்பங்கள், ஓவியங்கள், கைப்பணிப்பொருட்கள் ஆகியவற்றின் கண்காட்சி ஒன்று விரைவில் நடைபெற இருக்கின்றது.

இக்கண்காட்சி பற்றி அதன் பெறுப்பாளரான எம். ஜெயந்கனுடன் யாழ்ப்பாணம் ஸ்ரேசன் றோட் 52 ஆம் இலக்கத்திலுள்ள விக்னாடியூசன் சென்றறில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. (க)

## கண்ணீரும் கம்பலையுமாக இலங்கைத் தாய்மார்கள்

கொழும்பு மார்ச் 11

இலங்கையில் இன்று தாய்மார் கண்ணீரும் கம்பலையுமாக வாழ்கின்றனர்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற சர்வதேசப் பெண்கள் தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது :-

காணாமற் போன இளைஞரின் தாய்மார்கள் உதவி கேட்டு என்னிடம் வருகின்றனர். காணாமற் போனவர்களைக் கண்டு பிடித்துக் கொடுப்பதில் எவ்வளவோ முயற்சி செய்தும் பயன் கிடைப்பதாக இல்லை.

ஜே. வி. பியுடனான மோதல் முடிந்து விட்டது. என்று அரசு கூறுகிறது. ஆனால் காணாமல்போவோர் நிலை தொடர்கிறது.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார்.

(உ-எ)


புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும்
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
புங்குடுதீவு -10

### உதவி அச்சகர் தேவை

மேற்படி தேவஸ்தானத்திற்கு உதவி அர்ச்சகர் தேவை. குடும்பஸ்த்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். சம்பளமும் தகுந்த வேதனமும் வழங்கப்படும். விண்ணப்பத்தை 26-03-90க்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

மு சி. சண்முகராசா
(பொருளாளர், தர்மகர்த்தா)
ஆலயபரிபாலன தர்மகர்த்த சபை
[2767]



## மணிபல்லவ கலாமன்றம்
## நயினாதீவு

அகில இலங்கை ரீதியிலான
கவிதைப் போட்டி
கவிதை தலைப்பு
"தூரத்துப்பச்சை"

நயினாதீவு மணிபல்லவ கலாமன்றத்தினர் எதிர்வரும் சித்திரைத் திங்கள் 3-ம். 4-ம் (16, 17. 04. 90) திகதிகளில் கொண்டாடவிருக்கும் கலை விழாவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் கவிதைப்போட்டி ஒன்றினை நடத்தவுள்ளனர். இப்போட்டியில் முதற் பரிசாக தங்கப்பதக்கம் வழங்கப்படவுள்ளது. 2-ம், 3-ம், 4-ம், 5-ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பெறுமதி மிக்க பணப் பரிசில்கள் வழங்கப்படும். முதலாம் இடத்திற்குத் தெரிவு செய்யப்படும் கவிதை மன்றத்தினரால் வெளியிடப்படவுள்ள சிறப்பு மலரிலும் இடம் பெறும்.

நடுவர் குழுவினரின் தீர்ப்பே இறுதியானது: இவை சம்பந்தமான எவ்வித கடிதத் தொடர்புகளோ, மேன்முறையீடுகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா கவிதைகளில் நயினாதீவு பற்றி இடம் பெறுவது வரவேற்கத்தக்கது. போட்டிக்குரிய கவிதைகள் திரு. ப. க. மகாதேவா, போட்டிகளுக்குரிய செயலாளர் அஞ்சலகம், நயினாதீவு என்ற விலாசத்திற்கு 20-03-1990 க்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

**போட்டிக்குரிய தகைமைகளும் விதிகளும் -**

1. வயதுக் கட்டுப்பாடு இல்லை, ஆண், பெண் இருபாலாரும் பங்கு கொள்ளலாம்.
2. கவிதைகள் முன்னர் வெளி வராதவையாகவும் சுயமாக எழுதப்பட்டவையாகவும் இருக்க வேண்டும்.
3. கவிதை 45 வரிகளுக்கும், 60 வரிகளுக்கும் இடைப்பட்டதாக இருக்க வேண்டும்.
4. பெயர், விலாசம் சரியாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.
5. எழுதும் தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

கௌரவ செயலாளர்,
மணிபல்லவ கலாமன்றம் நயினா தீவு,
2761



தென் இந்திய யாத்திரைகள், காசி யாத்திரைகள் என்று நினைக்கும் பொழுது மனதில் தோன்றுவது

## ராஜா டூர்ஸ் ஸ்தாபனம் ஒன்று தான்

இலங்கை சங்கீத சபைக்குழு, அரசாங்க சுங்க பகுதி (H. M. Customs) இந்து சங்கம், யாழ் ஆசிரியர் சங்கம், தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி மாதாசங்கம், மற்றும் அகில இலங்கையில் பல கோஷ்டிகளுக்கு விசேட. முதல் தர ஒழுங்குகளை கடந்த 28 வருடங்களாக செய்யும் ஒரே ஒரு ஸ்தாபனம்:

இரண்டு ஸ்தாபனங்களின் சான்றிதழ்கள்:-

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் — யாழ் - கிளை

நிர்வாகி, ராஜா டூர்ஸ்

**ஆசிரியர்களுக்கான தென்னிந்தியச் சுற்றுலா**

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்க யாழ் கிளையினர் ஒழுங்கு செய்த ஆசிரியர்களுக்கான தென்னிந்தியச்சுற்றுலா மிக வெற்றிகரமாக நிறைவேற உதவிய தங்கள் நிறுவனத்திற்கு எமது நன்றிகள்உரித்தாகுக. 1982 ஆம் ஆண்டு புரட்டாசி மாத முற்பகுதியில் நாம் மேற்கொண்ட இச் சுற்றுலாவிற்கான சகல ஒழுங்குகளையும் மிகக் குறுகிய காலத்தில் மிகத் திருப்திகரமாகச் செய்து முடித்தமையையும் நாம் மேற்கொண்ட சுற்றுலாவின் போது தாங்களும் சக ஊழியர்களும் கலந்து கொண்டு அன்பாகவும் பண்பாகவும் பழகி எங்களுக்கு வேண்டியவற்றை உடனுக்குடன் கவனித்துச் செயலாற்றியமையும் என்றும் எமது உள்ளத்திலிருந்து அகலாது.

உங்கள் சேவை என்றும் தமிழ் மக்களுக்குத் தேவை. இன்று போல் என்றும் நம்பிக்கையான சேவையை வழங்குவீர்கள் என நம்புகின்றோம்.

நன்றி வணக்கம்
ச. சத்தியானந்தசிவம் (தலைவர்) சி. தார்சிசியஸ் (கௌரவ செயலாளர்)
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் — யாழ் கிளை

### ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை

கடமையுணர்வும் நம்பிக்கையும் கொண்டவர்கள் ராஜா டூர்ஸ் ஸ்தாபனத்தினர் என்பதை நான் நன்கு அறிவேன். அவர்கள் ஒழுங்கு செய்த குழுவுடன் எமது துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையினரும் நானும் 1982ம் ஆண்டு டிசம்பர் மாதம் யாத்திரை செய்து நிறைவு பெற்றோம். 162ஆவது தடவையாக தென்னிந்திய யாத்திரையும் சுற்றுலாவும் இவ்வாண்டு சித்திரை முதல் வாரம் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுவதாக அறிகிறேன். மிகவும் மகிழ்ச்சி தரும் இந்த யாத்திரையினால் மேலும் மேலும் தலயாத்திரைகளினால் பெறும் அனுபவம் சிறக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். அரசாங்க உல்லாசப் பயண ஸ்தாபனத்தில் அங்கிரிக்கப்பட்ட இந்த ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்குத் திருவருள் துணை புரியும் என்று வாழ்த்தி அமைகின்றேன். தங்கம்மா அப்பாக்குட்டி தலைவர்

### எமது அடுத்த 162வது சமய சரித்திர கலாசார சுற்றுலா சித்திரை 1990 இடங்கள்:

திருச்சி, மலைக்கோட்டைப்பிள்ளையார், ஸ்ரீரங்கம், திருவானைக்கால், சமயபுரம், கன்யாகுமரி, அரபிக்கடல், இந்து சமுத்திரம், வங்காளவிரிகுடா ஒன்று சேரும் திரிவேணி சங்கமம், நடுக்கடலில் விவேகானந்தர் மண்டபம், குமரி அம்மன், கருங்கல்தூண்களில் ச-ரி-க-ம-ப-த-நி-ஸ நாதங்கள், மிருதங்க ஒலி, ஜலதரங்க ஒலிகள் கேக்கும் சுசீந்திரம், குற்றாலம் நீர்வீழ்ச்சி, மதுரை மீனாட்சி, சுந்தரேஸ்வரர், திம்பம்மலை, மைசூர், மகாராஜா அரண்மனை, சாமுண்டீஸ்வரி அம்மன், நந்தி பிருந்தாவனம், பங்களூர், திருப்பதி, திருக்கழுக்குன்றம், மகாவலிபுரம், வி. ஜி. பி. தங்கக் கடற்கரை, கபாலீஸ்வரர், அஷ்டலக்ஷ்மி, அண்ணா சமாதி, எம். ஜி. ஆர். சமாதி, சிதம்பரம், சீர்காழி, நந்தனாருக்கு நந்தி விலகிய திருப்புன்கூர் முருகப்பெருமான் ஆறுபடை வீடுகள், திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழமுதிர்ச்சோலை, பழனி, சுவாமிமலை, திருத்தணிகை, மற்றும் பல.

வி. அமிர்தேஸ்வரராஜா (அதிபர், சமாதான நீதிவான்)

**168/1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

அன்னிய செலவாணி (Foreign Exchange) ஏற்கப்படும்.

10,000 பெண்கள் 7000 ஆண்கள் தங்கள் வசதிக்கேற்ப பங்குபற்றியுள்ளார்கள்.

[சி-3438]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஷ்மீர் மாநிலப் பிரச்சினை:

# எல்லையில் 2 லட்சம் இந்தியத் துருப்புக்கள்; கருத்து உடன்பாடு காணுவதில் சிங் தீவிரம்!

புதுடில்லி, மார்ச் 10
காஷ்மீர் தகராறில் இந்திய அரசியல் கட்சிகளிடையே கருத்து உடன்பாடு காணும் நடவடிக்கைகள் தொடருகின்றன.

ஒருவாரத்தில் இரண்டாவதுதடவையாக இன்று(சனி) புதுடில்லியில் சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் பிரதமர் வி. பி. சிங் சந்தித்தார்.

இதேவேளை பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் உள்ள ஆஸாத் - காஷ்மீர் எல்லைப்புறத்தில் இந்தியத் துருப்புக்கள் உஷார் நிலையில் வைக்கப்பட்டு இருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

சுமார் 2 லட்சம் துருப்புக்கள் யுத்தம் ஒன்றைச் சமாளிக்கக்கூடிய நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையில்,
காஷ்மீர் பற்றிய தகராறை இருதரப்புப் பேச்சுக்கள்மூலம் தீர்த்துக்கொள்ளும்படி பாகிஸ்தானுக்கு பங்களாதேஷ் ஆலோசனை கூறியிருக்கிறது.

கடந்த புதன்கிழமை டாக்கா சென்ற பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் யாகுல்கானிடம் பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் அன்ஸுல் இஸ்லம் மஹ்மூத் தனது அரசின் காஷ்மீர் நிலைப்பாட்டை விளக்கினார்.

காஷ்மீர் தகராறு தீவிரமடைந்த கடந்த ஆறு வாரங்களில் குறைந்தது 185 பேர் கொல்லப்பட்டுஉள்ளனர்.

★ ஜெயலலிதா கார் விபத்து

## பொய்த்தகவல் பரப்பியதாக வாழப்பாடி, வீரப்பன்மீது வழக்கு

### தமிழக அரசு முடிவு

சென்னை மார்ச் 10
தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி, அதிமுக துணைப் பொதுச் செயலாளரான எஸ். டி. சோமசுந்தரம், இராம வீரப்பன் ஆகியோர் மீது குற்றவியல் வழக்குகளைத் தொடரப் போவதாக தமிழக அரசு அறிவித்தது.

அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதா கார் விபத்தில் சம்பந்தப்பட்ட விஷயம் குறித்து பொய்ப்பிரசாரம் செய்தவற்காகவும் சட்டம் ஒழுங்கைக் கெடுக்க சதிசெய்ததாகவும் இவர்கள் மீது குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

## பிரிட்டிஷ் இளவரசர் பேச்சு; மலேஷியா கண்டனம்!

கோலாலம்பூர், மார்ச் 10
மலேசியாவில் வாழும் பழங்குடியினர் மீது அரசு இனக்கொலை நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக பிரிட்டிஷ் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் கண்டனம் தெரிவித்தற்கு கோலாலம்பூர் அரசு ஆட்சேபனை தெரிவித்துள்ளது.
இளவரசர்மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று மலேசியத் தூதர் லண்டனில்வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பிய ஆட்சேபக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மலேசியாவில் உள்ள சரவாக் மாநிலத்தில் வாழும் பெனான்ஸ் என்ற பழங்குடியினரை இனக் கொலையில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று இளவரசர் சாள்ஸ் கடந்த பெப்ரவரி மாதம் லண்டனில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் கோரியிருந்தார். (எ)

## கொலம்பியாவில் 300 பொதுமக்கள் கடத்தப்பட்டனர்

ஸாகொட்டா மார்ச் 10
கொலம்பியாவில் இந்த ஆண்டில் இதுவரை குறைந்தது மூந்நூறு மக்கள் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு உள்ளனர் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

★ இந்திய நாடாளுமன்றம்

## ராஜ்ய சபைக்கு 76 எம்பிக்கள்; தமிழ் நாட்டில் இருந்து 6பேர்!

மார்ச் 29 இல் தேர்தல் மூலம் தெரிவாவர்.

புதுடில்லி மார்ச். 10
ராஜ்ய சபாவுக்கு 78 எம்பிக்களை தெரிவு செய்யும் தேர்தல்களை வருகிற 29 ஆம் திகதி நடத்த தேர்தல் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

ராஜ்ய சபையில் 3 இல் ஒரு பங்கு உறுப்பினர்களான எழுபது எம்பிக்களின் பதவிக் காலம் வருகிற எப்ரல் மாதம் 2 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

அத்துடன் நாடாளுமன்றத்துக்கோ அல்லது சட்டசபைக்கோதேர்ந்து எடுக்கப் பட்டதைத்தொடர்ந்து எட்டு எம்பிக்கள் ராஜினாமாச் செய்து விட்டனர். அந்த 8 இடங்களும் நிரப்பப்பட வேண்டும்.
மா நிலங்களின் சட்டசபைகளில் உறுப்பினர்களாக இருக்கும் எம். எல். ஏக்கள் இந்த எம்பிக்களை தெரிவு செய்வர்
78 எம்பிக்களில் 76 பேர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவர். எஞ்சிய 2 எம்பிக்களும் நியமனம் செய்யப்படுவர்.

ராஜ்ய சபையின் மொத்த எம்பிக்களின் எண்ணிக்கை 245. இவற்றில் இந்திரா காங்கிரஸுக்கு 133 எம்பிக்கள் உள்ளனர்.

ஜனதாதள் கட்சிக்கு 22 எம்பிக்களும், பாரதிய ஜனதாவுக்கு 8 இடங்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 3இடங்களும், மார்க்ஸியம்யூனிஸ்ட் கட்சிக்கு 17 எம் பிக்களும் தெலுங்கு தேசம் கட்சிக்கு 13 எம்பிக்களும் ராஜ்ய சபையில் உள்ளனர்.

7 திமுக எம்பிக்களும் 6 அதிமுக எம்பிக்களும் ராஜ்ய சபையில் இடம் பெற்றுள்ளனர்.

## மிருதங்க அரங்கேற்ற அழைப்பிதழ்



செல்வன் சச்சிதானந்தம் சஞ்சயன்

திரு. க, சச்சிதானந்தம் (புகையிரதநிலைய அதிபர்) புகையிரதப்பகுதி கொழும்பு, திருமதி கௌரி சச்சிதானந்தம் அவர்களின் மகன் சஞ்சயன் அவர்களின்

மிருதங்க அரங்கேற்றம்

தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலயத்தில்

சனிக்கிழமை 17-3-1990 பிற்பகல்2-30 மணியளவில் நடைபெறவுள்ளது.

திரு. சச்சிதானந்தம்
திருமதி கௌரி சச்சிதானந்தம்

(11814)


★ நம்பிக்கை
★ நாணயத்தின்
★ சின்னம்

⟹ ஷப்றா

நிலையான முதலீடுகள்
கீழ்க்கண்ட வட்டி விதங்களில் வரவேற்கப்படுகின்றன.

3 வருடங்கள் 24%
2 வருடங்கள் 23%
1 வருடம் 20%

திறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230,000 | 4.365,000 | 5,817,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,336 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577.432 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283.818 | 7,718.284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,208,887 | 25,811.712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310.787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8.505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430.012 |
| வரி செலுத்தியபின் தேறிய லாபம் | 1.356,206 | 1,372.825 | 2,330.012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

பணிப்பாளர் சபை:

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
A. I. B (Lond) முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம்
A. I. B. (Lond) பொதுமுகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி
B. A. (Hons)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

மேலதிக விபரங்களுக்கு:-

ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலை பேசி இல. 589310 & 500576

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

★ இன்றைய சேமிப்பு நாளைய சந்ததியின் பாதுகாப்பு ★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் படை தாக்கினால்....

(1ம் பக்கத்தொடர்ச்சி)
உறுதிமொழியை எப்படி நம்புவது?

பதில்: கடந்த கால அனுபவங்களை நாம்ஒரு படிப்பினையாகத்தான் கொண்டிருக்கிறோம். தாக்குதல் நடத்தப்பட்டால் நாம் அதனை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

கேள்வி: அப்படியான ஒரு நிலை ஏற்பட்டால் இந்தியத் தரப்பு உதவியை நீங்கள் கோருவீர்களா? எதிர்பார்ப்பீர்களா?

பதில்: சகல மக்களினதும், சமூகத்தினதும் உதவியைக் கோருவோம்.

கேள்வி: இந்தியாவின் இராணுவ உதவியைக் கோருவீர்களா?

பதில்: நிச்சயமாக இராணுவ உதவியை நாடமாட்டோம். ஆனால் எல்லாத் தரப்பினரதும் தார்மீக உதவியை நாடுவோம்.

கேள்வி:- தமிழ் தேசிய இராணுவத்தைச் சேர்ந்த 3 ஆயிரம் இளைஞர்கள் திரும்பி இலங்கைக்கு வருவதாக நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வந்தால் உங்கள் நடவடிக்கை என்னவாக இருக்கும்?

பதில்: எல்லா இளைஞர்களுமே எங்களிடம் வந்து சரணடையலாம். ஆனால் ஆயுதங்களுடன் அவர்கள் இங்கு வர நம் அனுமதிக்கமாட்டோம்.

சரணடைவோரை கடந்த காலத்தில் விடுவித்தது மாதிரி நடவடிக்கை எடுக்கப்படும்.

கேள்வி: தேசிய அரசியல் நீரோட்டத்தில் இறங்கியிருப்பதாகக் கூறுகிறீர்கள். ஏனைய கட்சிகளும் ஜனநாயக ரீதியில் இயங்க—தேர்தலில் கலந்துகொள்ள — அனுமதி வழங்குவீர்களா?

பதில்: இந்தக் கேள்வியே தவறு. எல்லோருமே ஜனநாயக ரீதியில் தேர்தலில்பங்கு கொள்ளலாம். அதற்கு எமது அனுமதி தேவை என்று கூறத் தேவையில்லை.

கேள்வி: ஒரு பக்கத்தில் ஆயுதங்களை வைத்திருக்கிறீர்கள். மறுபுறத்தில் ஜனநாயக வழி என்கிறீர்கள். இந்த முறை சரியானதா? நீங்கள் ஆயுதத்தைக் கையில் வைத்துக்கொண்டு மற்றக் கட்சிகளைத் தேர்தலில் பங்குபற்றும்படி கேட்பது சரியா?

பதில்: ஜனநாயக அரசியல் என்பது ஆயுதத்திற்கு அப்பாற்பட்டது. நமது சமூகம் இருக்கும் தற்போதைய அமைப்பில் ஆயுதங்களைக் கைவிடுவது உசிதமானதல்ல. அதனால் வைத்திருக்க வேண்டிய தேவை இருக்கிறது.

கேள்வி: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதத்தை வைத்திருப்பதற்கும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி ஆயுதத்தை வைத்திருப்பதற்கும் வேறுபாடு நிறைய உண்டு. இன்று நீங்கள் மக்கள் முன்னணித் தலைவராக மேடையில் மக்களுக்கு முன் வந்திருக்கிறீர்கள்.

ஜனநாயக ரீதியில் மக்கள் முன் பிரசாரம் செய்ய வரும் நீங்கள் சீருடையில் வந்திருப்பது பொருத்தமானதா?

பதில்: நாம் சீருடையில் இன்று வந்திருப்பது நமது சமூகத்தின் எதிர்காலத்தில் ஏற்படவேண்டிய மாற்றத்தை அவர்களுக்குச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான். அது என்ன மாதிரியான மாற்றம் என்றால் — முதலில் எமது இலட்சியம் ஈடேற வேண்டும்...!

கேள்வி: இலட்சியம் என்று நீங்கள் கூறுவது 'ஈழம்'?

பதில்: எமது இலட்சியம் ஈடேற வேண்டும். அவ்வளவுதான். அதற்கு மக்கள் தமது பலத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

மற்றது போராளி என்பவன் மக்கள் மத்தியில் ஒரு உயர்ந்த — உத்தமமான இடத்தைப் பிடித்திருக்க வேண்டும். அதற்கு அவனுக்கு ஒரு அடையாளமாகத்தான் இந்தச் சீருடை.

கேள்வி: நீங்கள் ஜனநாயக நீரோட்டத்தில் இறங்கி, இலங்கை அரசாங்கத்தின் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு தேர்தலில் போட்டியிடத் தயாராக இருப்பதால் நீங்கள் ஈழத்தைக் கைவிட்டு விட்டீர்கள் என்று சொல்ல முடியுமா?

பதில்: தமிழீழக் கோரிக்கையை நாங்கள் கைவிடவில்லை. அதனைக் கைவிட வேண்டிய தேவை ஏற்படவில்லை. நாங்கள் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு விட்டோமா என்ற கேள்வி எழவேண்டிய தேவையும் இல்லை.

கேள்வி: மக்கள் மத்தியில் பேசப்படும் ஒரு முக்கிய விடயம். இதற்கு நீங்கள் திட்டவட்டமாகப் பதில் கூற வேண்டும். திரு. பிரபாகரன் எப்போது மக்கள் முன்னிலையில் தோன்றுவார்? எங்கு தோன்றுவார்?

பதில்: இந்தியப்படை வெளியேறியவுடன் அவர் மக்கள் முன் வருவார். அது எங்கு, எப்போது என்பதை இப்போது கூற முடியாது. சிலவேளை நாளை கூட மக்கள் முன் அவர் தோன்றுவார்.

## வானொலி நிகழ்ச்சிகள் 11- 3- 1990

5.00 நாதாஞ்சலி
5.05 தோத்திரமாலை
5.30 பாமாலை
5.45 சைவ நற்சிந்தனை
5.50 கிறிஸ்தவ நற்சிந்தனை
5.55 பௌத்த நற்சிந்தனை
6.00 வர்த்தக சேவை
6.30 செய்திகள்
6.40 செய்தித்தாள் கண்ணோட்டம்
7.00 வர்த்தக சேவை
7.45 மாகாணச் செய்திகள்
7.50 வர்த்தக சேவை
8.00 கிறிஸ்தவ கீதங்கள்
8.15 மெல்லிசைப் பாடல்கள்
8.30 சுவாரா மலாயூமலாய் மஞ்சரி
9.00 வர்த்தக சேவை
10.00 கல்விச்சேவை ஆங்கில நிகழ்ச்சி
10 30 வீடே நாடகம்
10.45 பூவையர் பூங்கா
11 15 சிறுவர்மலர்
11.45 நேயர் கடிதம்
12.00 வர்த்தக சேவை
12 45 செய்திகள்
1.00 வர்த்தக சேவை
6.00 செய்திகள்
6.15 ஞானாமிர்தம்
6.30 கிறிஸ்தவ கீதங்கள்
7.00 கத்தோலிக்க நிகழ்ச்சி
7.30 ராகரசம்
7.45 வாத்திய இசை
7 50 உலகச் செய்திகள்
8.00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9 00 செய்திகள்
9.20 பக்திப் பாடல்கள்
9.30 கவிதைச் சித்திரம்
9 45 இசைக் கச்சேரி
10.45 நினைவில் நிறைந்தவை
11.00 ஒலிபரப்பு முடிவு.


# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

11-03-86 அன்று யாழ் ஆஸ்பத்திரியில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட தோழர்களுக்கும் மக்களுக்கும் எமது அஞ்சலிகள்



தோழர் கிசாந் (திருமலை) | தோழர் காளி (பருத்தித்துறை) | தோழர் தாஸ் (உடுப்பிட்டி) | தோழர் பீற்றர் (வதிரி) | தோழர் மோகன் (முல்லைத்தீவு)

★ மக்களே எங்கள் இதயங்கள் மறக்காத இந்த மனிதர்கள் ஈழமக்களின் மனித உரிமையை நிலை நாட்டப் புறப்பட்டவர்கள்

★ வரலாறு தம்மீது சுமத்திய சமூகப் பொறுப்பை உணர்ந்து விடுதலைக்கு உழைத்தவர்கள்.

★ தங்கள் தாய்நாட்டின் விடிவுக்காக உழைக்க முன்வந்தவர்கள் கொடியவர்களுக்கு இரையாகினரே.

அந்தச் சம்பவத்தை எதிர்த்து போர் தொடுத்து மரணித்த மக்களுக்கும், எங்கள் உள்ளங்களில் நிறைந்திருக்கும் எங்கள் இனிய தோழர்களுக்கும் அஞ்சலிகள்.

உங்கள் பிரிவால் வாடும்:
- தோழர்கள்

[2737]


## இலங்கை...

(1ம்பக்கத்தொடர்ச்சி)
ஒன்று இயங்கி வந்தது கலவரங்களை அடுத்து அப்பிரிவு திருமலை நகருக்கு மாற்றப்பட்டு இன்றும் அங்கேயே இயங்கிக்கொண்டு வருகிறது.

இப்பிரதேசம் முழுவதும் அன்று முதல் இந்தியப்படையினரின் பொறுப்பில் இருந்தது. இங்குதான் அவர்களுக்குத் தேவையான டீசல், உணவு மற்றும் பொருள்களைச் சேகரித்து வைத்திருந்தனர்.

கடந்த 31ஆம் திகதிமுதல் இந்தியப் படையினர் இங்கிருந்து முற்றாகவே வெளியேறி விட்டனர். இப்பகுதியிலேயே 8ஆம் திகதி முதல் இலங்கை கடற்படையினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(இ-150)

## தமிழ்அகதிகள்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)
மாநாட்டில் தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதி மற்ண்ட தகவல்களை வெளியிட்டார்

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கைப் போராளிகள் தமிழ்நாட்டில் காலூன்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மீண்டும் தமிழ்நாட்டில் எந்தக் குழுவையும்சேர்ந்த இலங்கைப் போராளிகளின் முகாம்கள் அல்லது பாசறைகள் அமைவதையோ, போராளிகள் ஆயுதங்களை ஏந்தக்கூடிய வாய்ப்புக்களைத் தமிழ்நாட்டில் பெறுவதையோ தமிழ்நாடு அரசு விரும்பவில்லை.

தமிழ்நாட்டில் அத்தகையவர்களின் நடமாட்டம்,ஏற்படுமானால், அவர்களைத் தொடர்ந்து அவர்களோடு மோதுவதற்குவேறு குழுக்கள் வந்து சட்டம்-ஒழுங்கு அமைதிப் பிரச்சினை ஏற்படக் கூடும்.

உண்மையிலேயே அகதிகளாக வருபவர்களை ஆதரிக்கவும் அவர்களுக்கு வசதிவாய்ப்பைச் செய்து தரவும் தமிழக அரசுக்கு எந்தத் தடையும் இல்லை.

கடந்த 2, 3 மாதங்களில் தமிழ்நாட்டிற்கு அப்படி வந்த அகதி மக்கள் சுமார் மூவாயிரம் பேர் முகாம்களில் வைக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

இப்படி கருணாநிதி கூறினார். (இ-எ)

இரண்டு கப்பல்களில் வந்த

# தமிழ் அகதிகள் 1, 324 பேர் நேற்று விசாக பட்டினத்தில்!

சென்னை, மார்ச் 11

திருகோணமலையில் இருந்து தமிழ் அகதிகளை ஏற்றிச் சென்ற இரண்டு இந்தியக் கப்பல்கள் நேற்று அதிகாலை விசாகப் பட்டினம் போய்ச் சேர்ந்தன.

பெண்கள் குழந்தைகள் உட்பட ஆயிரத்து 324 பேர் இந்தக் கப்பல்களில் இருந்தனர்.

மத்திய அரசின் மறுவாழ்வுத் துறையினர் விசாகப்பட்டினத்தில் இவர்களுக்கு வேண்டிய உணவு, மற்றும் வசதிகளைச் செய்து கொடுத்தனர்.

பின்னர் பஸ்களில் ஒரிஸ்ஸா மாநிலத்தில் உள்ள கோராக்பூர் மாவட்டத்துக்கு இவர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர்.

இவர்கள் அங்கு தண்டகாரண்ய முகாமில் இரண்டு மாதங்களுக்கு குடியமர்த்தப் படுவார்கள்

இவர்களைப் பராமரிப்பதற்கான முழுச் செலவையும் இந்திய மத்திய அரசே பொறுப்பேற்கும் என்று இந்திய வானொலி தெரிவித்தது.

இதேவேளை ஈழத்தமிழர் இந்தியா வருவது குறித்து பி. பி. ஸி வானொலி நேற்றிரவு அறிவித்ததாவது:-

இரண்டு கப்பல்களில் சென்ற இலங்கைத் தமிழ் அகதிகளை பொறுப்பேற்க ஆந்திர மாநில அரசும் மறுத்துவிட்டதைத் தொடர்ந்து பிரதமர் வி. பி. சிங் ஒரிஸ்ஸா மாநில முதலமைச்சருடன் தொடர்பு கொண்டார்.

அதனைத்தொடர்ந்துதான் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு தஞ்சமளிக்க ஒரிஸ்ஸா மாநில முதலமைச்சர் பிஜு பட்நாயக் முன்வந்தார்.

இலங்கைத் தமிழ் அகதிகளுடன் வந்த இரண்டு கப்பல்களும் முதலில் ஒரிஸ்ஸா மாநிலத்தில் உள்ள பராவித்துறைமுகம் செல்வதாகத்தான் இருந்தது.

கடைசி நிமிடத்தில் தான் இரண்டு கப்பல்களும் விசாகப் பட்டினம் துறைமுகத்துக்குத் திருப்பி விடப்பட்டன என்று பி. பி. ஸி. நேற்று இரவு தெரிவித்தது. (ஔ-)

## சிதம்பரம் கண்டனம்

சென்னை, மார்ச் 11

இலங்கையில் இருந்து வெளியேறிவரும் தமிழர்களுக்கு தமிழகத்தில் தஞ்சம் அளிக்க மறுத்தமைக்காக இந்திய மத்திய அரசையும் தமிழக அரசையும் முன்னாள் மத்திய அமைச்சர்களான ப சிதம்பரம், எம் அருணாசலம் ஆகியோர் கண்டித்தனர். (இ-எ)

## யாத்திரிகர் இல்லை

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருநாளுக்கு யாத்திரீகர் இம்முறை செல்லமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இன்று ஞாயிறன்று நடக்க வேண்டிய திருநாள் கொண்டாட்டங்கள் யாழ் ஆயர் கலாநிதி மேதகுவ. தியோகுப்பிள்ளை ஆண்டகையால் ரத்து செய்யப்பட்டிருந்தது

## கவின் கலை...

(1ம்பக்கத்தொடர்ச்சி)
தலைவர் திரு. கோ மகேந்திரராஜா, செயலாளர்நாயகம் திரு. யோகரட்னம் யோகி. மற்றும் கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் கிளிநொச்சிக்கு வந்தபோது அவர்களுக்கு பூரணகும்ப மரியாதை வழங்கப்பட்டது.

கல்லூரி திறப்பு விழா நிகழ்ச்சியை அடுத்து கல்லூரியின் வெளிக்கள உத்தியோகத்தர், போதனை புரியும் ஆசிரியர் ஆகியோருக்கு உரிய நியமனக் கடிதங்களை திரு. மகேந்திரராஜாவும், திரு. யோகியும் வழங்கினர்.

# இராமநாதபுரத்தில் ஈ.பி. ஆர். எல்.எவ் முகாம்! அகற்றும் முயற்சியில் பொலீஸார்!!

லண்டன், மார்ச் 11

இராமநாதபுரம் அருகே ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கம் முகாம் ஒன்றை அமைத்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவற்றைக் கண்டுபிடித்து அகற்றும் முயற்சியில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர் என்று பி பி. சி வானொலி நேற்றிரவு அறிவித்தது.

இதே வேளை-

இலங்கையில் இருந்து அகதிகளுடன் சென்னைத் துறைமுகத்துக்குச் சென்ற கப்பல்களை தமிழக அரசு அதிகாரிகள் துறைமுகத்தினுள் பிரவேசிக்க விடாது திருப்பி அனுப்பினர் என்பது தெரிந்ததே (ஒ-எ)

# உலகத்திற்கே வழிகாட்ட......

(1ம் பக்கத் தொடர்ச்சி)
அனுமதித்தீர்களேயானால் அதை நம்பிப் பிழைப்போரின் ஆதரவு, வாக்குகள் உங்களுக்குக் கிடைக்கும் '' என்றார்கள்

ஆனால் நாம் அதனை ஏற்கவில்லை. தென்னிந்தியாவில் உருவாக்கப்படும் திரைபடங்கள் ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவுபவையும் அல்ல. ஒரு கலாசாரத்தைக் காட்டி நிற்பவையும் அல்ல. அவற்றைப் பார்ப்பதன் மூலம் மக்கள் ஒரு வக்கிரித மனநிலையை அடைகின்றார்களே தவிர பண்வளர்ச்சி அடைவதில்லை.

சினிமா ஆபாசத்தினால் ஒழுக்கம் குறைகிறது. மாணவர் கல்வி பாழாகுகின்றது. இதனால்தான் நாம் மினிசினிமாக்களை மூடினோம்.

நாம் ஒரு அரசியற் கட்சியாகப் பதிவு செய்தாலும் தேர்தல் எமது நோக்கமல்ல. தேர்தலுக்கோ, வாக்குக்காக வாழும் அல்லது வாழப்போகும் ஓர் அமைப்பல்ல எமது ஸ்தாபனம்.

எம்மைப் பொறுத்தவரை இந்த நாடு உலகத்திலேயே தலைசிறந்த, உலகத்திற்கு வழிகாட்டுகின்ற ஒன்றாக இருக்கவேண்டும் என்ற வெறிகொண்டு அலைபவர்கள் நாங்கள் அதற்காக உழைத்தவர்கள். உடலைத் தந்து உயிரைத் தந்து அதனை வளர்த்தவர்கள்.

நாம் எமது இராணுவ, இராஜதந்திர, அரசியல நடவடிக்கைகள் மூலம் இந்தியப் படையை எங்கள் மண்ணை விட்டு வெளியேற்றியிருக்கின்றோம்.

தேசிய இனத்தை அழிக்க வேண்டும் என்று இங்கு வந்த படை-வரலாறு காணாத தோல்வியுடன் திரும்பிக் கொண்டிருக்கிறது. அவர்களிடம் ஆயுதங்களைப் பெற்று எமது மக்களை துன்பப்படுத்திய சமூக விரோதிகளும் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள்.

நாம் ஸ்ரீலங்கா அரசுடன் பேசிக்கொண்டிருக்கிறோம்.

குடியேற்றங்கள் சில இடங்களில் நடைபெறுவதை சுட்டிக்காட்டியுள்ளோம்.

எமது மண்ணில் இருக்கும் இராணுவ முகாம்களைக் கண்டு எமது மக்கள் பயப்படுகிறார்கள். அவற்றை படிப்படியாகக் குறையுங்கள் என்று கேட்டுக் கொண்டோம். அதற்கு அவர்கள் இணங்கியுள்ளனர்.

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கக் கோரியுள்ளோம். அதற்கு முயற்சிப்பதாக கூறியுள்ளார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாண சபை ஈழதேசிய அரசுப்பேரவை பிரகடனத்தைச் செய்திருக்கிறது.

குழப்பமான சூழ்நிலையில் இந்தப் பிரகடனத்தை அவர்கள் செய்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன?

ஒன்று, இந்த மண்ணை விட்டு ஓடும் போது ஏதோ செய்துவிட்டு ஓடவேண்டும் என்று நினைத்தார்கள்

மற்றது, சிங்களஅரசு இதற்குப் பதில் நடவடிக்கை எடுக்கும். அதனால் இராணுவ மோதல் ஏற்படும். அதைக் காட்டி இந்தியப் படையை இங்கிருக்கச்செய்யலாம் என்று நினைத்தார்கள்.

இந்தியப்படை இங்கிருந்து தங்களை, தங்கள் அதிகாரத்தைப் பாதுகாக்கவேண்டும் என்பது தான் இவர்கள் நோக்கம். எமது மக்கள், அவர்கள் பாதுகாப்பு ஆகியவை மீது இவர்களுக்கு அக்கறை இருந்ததில்லை.

பிரகடனம் செய்ததால், நாம் இலங்கையில் இருக்க முடியாது. ஆகவே இந்தியாவில் அகதிகளாக இருக்க அனுமதியுங்கள் என கேட்கலாம் என்றும் அவர்கள் நினைத்தார்கள்.

அவர்களால் எமது போராட்டம் கேலிக் கூத்தாக்கப்பட்டு, கொச்சைப்படுத்தப் பட்டிருக்கிறது.

கடந்த 18 வருடங்களாக நாம் போராட்டம் நடத்தியிருக்கிறோம். இந்தக் காலத்திலே எமது உரிமைகளை நாம் விட்டுக்கொடுத்ததாக வரலாறு கிடையாது.

இந்தியா எம்மைப் பணிய வைக்க முயன்றது. இந்தியாவுடன் கூட்டுச் சேர்ந்து இலங்கை எம்மைப் பணிய வைக்க முயன்றது. அதோடு கூலிப் பட்டாளங்களும் சேர்ந்து எம்மை அழிக்க முயன்றன.

என்றுமே, எந்தச் சக்தியுமே ஒரு அழுத்தம் போட்டு ஒரு தீர்வை எங்கள் மீது திணிக்க முடியாது.

உலகத்தில் பெரிய இராணுவத்தை நாம்—தமிழர்களும், முஸ்லிம்களும்—எப்படி விரட்டியடித்தோம் என்று உலகம் வியந்துகொண்டிருக்கிறது.

அத்தகைய உன்னதமான உயர்ந்த வரலாற்றை நாம் படைத்திருக்கிறோம் — என்றார்.

முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா), கவிஞர் காசி ஆனந்தன், விடுதலைப் புலிகளின் கிளிநொச்சிப் பொறுப்பாளர் திரு. கோபி, வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. எஸ் சந்திரன். கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோரும் உரையாற்றினர். (உ-9)

## மூப்பனார்...

(1ம்பக்கத்தொடர்ச்சி)
சுமார் 2 ஆயிரம் காங்கிரஸ் தொண்டர்களும் சுமார் 2 ஆயிரம் சமூகவிரோதிகளும் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை சென்ரல் ரயில் நிலையத்தில் தாதர் எக்ஸ்பிரஸ் முன் மறியல் செய்வதற்காக திரு. ஜி. கே. மூப்பனார் முன்னாள் அமைச்சர்களான ப. சிதம்பரம் எம். அருணசலம் ஆகியோர் உட்பட 200 பேர் கைது செய்யப்பட்டனர்.

மொத்தமாக தமிழ்நாடு முழுவதும் 18 எம்பிக்கள். 21 எம். ஏல்கள் உட்பட பலர் கைதானார்கள்.

இந்த ரயில் மறிப்புப் போராட்டத்தால் ரயில் சேவைகள் பாதிக்கப்படவில்லை என்றும் 95சதவீதமான ரயில் சேவைகள் நடைபெற்றன என்றும் முதலமைச்சர் கருணாநிதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஒ-எ)

## வேலணையில்..

(1ம் பக்கத்தொடர்ச்சி)
வீடுகளிலேயே கொள்ளை இடம்பெற்றது.

இதனை அறிந்து அவ்விடத்துக்கு விடுதலைப் புலிகள் விரைந்து வந்தபோது கொள்ளையர்கள் தப்பிச் சென்று விட்டனர் என்று சொல்லப்பட்டது. (ஒ-167)


# வேகமாக விற்பனையாகிறது

பிரபல எழுத்தாளர்களின் சரித்திர, சமூக, மர்ம நாவல்கள், சிறுவர்களுக்கான அறிவுக் கதைகள், கட்டுரைகள் ஆங்கில, தமிழ் அகராதிகள், பள்ளிப் பிள்ளைகளுக்கான பாட நூல்கள் நவீன தையற்கலை, சமையற்கலை, சோதிடம், சமயம், Medical, Accounting, Engineering, Computor, இன்னும் உங்கள் புத்தக தேவை எதுவானாலும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

'' யாழ் நகரிலும், தலை நகரிலும் வாடிக்கையாளரின் நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஸ்தாபனம் ''
வியாபாரிகள், பாடசாலைகள், நூலகங்கள் ஆகியவற்றிற்கு விசேட கழிவு வழங்கப்படும்.

**ALL CEYLON DISTRIBUTORS,**
(மைலன் கட்டிட மேல் மாடி)
119/1, K. K. S. Road, Jaffna.

[2760]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல் கட்டுபவரும்
கண்ணாடி தருபவரும்,



கிளை: P. I. பர்னாண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்புறம்)
யாழ்ப்பாணம்.



# உதயன்


11 - 03 - 1990 ஞாயிற்றுக்கிழமை



கண்ணாடி கொடுப்பவரும்
பல் கட்டுபவரும்!



P. I. பர்னாண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்புறம்)
யாழ்ப்பாணம்.

நேற்று கிளிநொச்சி கவின்கலைக்கல்லூரித்திறப்புவிழா நிகழ்ச்சியின்போது திரு. மாத்தயா மங்கள விளக்கேற்றுவதை முதற்படத்திலும், அங்குள்ள பதிவுப்புத்தகத்தில் அவர் முதலாவதாக கையெழுத்திடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். அருகில் அமர்ந்திருப்பவர் திரு. யோகரட்ணம் யோகி, நடுவில் கலாசாரப் பரிவுப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தின துரை காணப்படுகின்றார்.

## கோவில்புளியங்குளத்தில் இளம் பெண் விசாரணையில்

வவுனியா, மார்ச் 11

நெடுங்கேணி கோவில் புளியங்குளத்தில் உள்ள வீடொன்றில் இருந்து ஆயிரக் கணக்கான ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துவிட்டு வீட்டுச் சிறுமியின் கழுத்தைத் திருகி அவரைக் கொலை செய்ய முயன்றார் என்று கூறப்படும் இளம் பெண்ணொருவர் விடுதலைப்புலிகளினால் பிடிக்கப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட ரூபா 40ஆயிரம் பெறுமதியான நகைகள் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டன.

கழுத்து திருகப்பட்ட நிலையில் பற்றையில் போடப்பட்டிருந்த ஆறு வயது சிறுமி தற்போது அனுராதபுரத்தில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(8- 164)

## வரதரின் மனைவி இந்தியா பயணம்

கொழும்பு மார்ச் 11

வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாளின் மனைவி கடந்த வியாழன் திருகோணமலையில் இருந்து விமானம் மூலம் இந்திய பயணமானார் என்று 'சண்டே டைம்ஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அவரை அவரது கணவர் திரு. வரதராஜப்பெருமாள் வழியனுப்பிவைத்தார்என்றும் அதற்கு முன்னர் மாகாண நிதி அமைச்சர் திரு. பெ. கிருபாகரனும் சில உயர்அதிகாரிகளும் சென்னைக்குப் பயணமானார்கள் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## அரசமைப்பில் மீண்டும் திருத்தம் வருமா?

கொழும்பு, மார்ச் 11

மாகாணசபையைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்குஅதிகாரம் வழங்கும் திருத்தம் ஒன்றை அரசமைப்புக்குக் கொண்டு வரஅரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக கொழும்புச்செய்திகள் தெரிவித்தன.

இதற்கான சட்டநகலைத் தயாரிக்கும் பணியில் சட்டமா அதிபர் திணைக்களம் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உத்தேச அரசமைப்புத் திருத்தம் 15 வது திருத்தமாக அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசமைப்பைத் திருத்தத் தேவையான மூன்றில்இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற சுதந்திரக்கட்சியின் ஆதரவை அரசாங்கம் கோரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-எ)

### ம.போ.சவுக்கு கடன் வழங்க

## பெற்றோலிய-டயர் கூட்டுத்தாபனங்கள் மறுப்பு

கொழும்பு மார்ச், 11

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்கு கடனுதவி அடிப்படையில் பொருள்கள் வழங்குவதை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் இலங்கை டயர் கூட்டுத்தாபனமும் இடைநிறுத்தி வைத்துள்ளன.

ஏற்கனவே வாங்கப்பட்ட பொருட்களுக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 15 கோடி 10லட்சம் ரூபாவும் இலங்கை டயர் கூட்டுத்தாபனத்துக்கு 2 கோடி 70 லட்சம் ரூபாவும் இலங்கை மத்தியபோக்குவரத்துச் சபை செலுத்த வேண்டியிருக்கிறது.

இதனைத்தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது [தி. எ]

### திருமலை

## சிங்கள மகா வித்தியாலயம் மீண்டும் இயங்கும் அறிகுறி

திருகோணமலை மார்ச், 11

திருகோணமலையில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இயங்காமலிருந்த சிங்கள மத்திய மகா வித்தியாலயத்தை மீண்டும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை இந்தியஅமைதிப் படையினர் இப்பாடசாலையில் முகாமிட்டிருந்தனர் அத்தோடு மாகாணசபையின் சுகாதார அமைச்சும், திருமலை கோட்டக் கல்விப் பிரிவும் இங்கு இயங்கி வந்தன. கடந்த வியாழக்கிழமை இந்தியப்படையினர் இங்கிருந்து முற்றாக வெளியேறிவிட்டனர். இரு அலுவலகங்களும் இடம் மாற்றப்பட்டுள்ளன.

இலங்கைப் பொலிசார் இந்த காவலுக்கு வைக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைக் கட்டிடங்களுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை அதிபர் காரியாலயம் மாத்திரம் சேதமடைந்துள்ளது. இந்த நிலையில் மீண்டும் பாடசாலையை ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இங்கு கல்விகற்ற சிங்கள மாணவ / மாணவிகள் இப்போது பொலிஸ் நிலையத்திற்கு அண்மையிலுள்ள பௌத்த ஆலயத்தில் தற்காலிகமாக கல்விகற்று வருகின்றனர். [தி-1501]

## முல்லைவங்கியில் இன்று நிவாரணம்

முல்லைத்தீவு மார்ச் 11

கொக்குளாய் கொக்குத்தொடுவாய் கருநாட்டுக்கேணி ஆகிய இடங்களில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் 550 குடும்பங்களுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை ரூபா 6000 வழங்கப்படும். முல்லைத்தீவு இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் திரு. எஸ். விக்கினராசா இதனைத் தெரிவித்தார். [தி-92]

## அந்தக்கப்பலில் 206 குழந்தைகள்

கொழும்பு, மார்ச் 11

திருகோணமலையில் இருந்து ஹர்ஷாவர்த்தனா கப்பலில் சென்னை சென்ற இலங்கைத்தமிழ் அகதிகளில் 206 குழந்தைகள், 1●8 பெண்கள், 352ஆண்கள் இருந்தனர்.

இக்கப்பலுக்கே சென்னைத் துறைமுகத்தினுள் பிரவேசிக்க அனுமதி மறுக்கப்பட்டது. (இ-எ)

## அமைதிப்படை இருக்கும்வரை பாதுகாப்பு

கொழும்பு, மார்ச் 11

இலங்கையில் அமைதிப் படை இருக்கும் காலம்வரை திரு. வரதராஜப்பெருமாள் உட்பட அனைவருக்கும் பாதுகாப்பளிப்பது அமைதிப் படையின் பொறுப்பாகும்.

இலங்கைக்கான இந்தியத் தூதர் எல். எல். மெஹ்ரோத்திரா செய்தியாளர்களிடம் முன் கண்ட தகவலை வெளியிட்டார். (இ-எ)

## இரவு நேர பஸ்

கொழும்பு மார்ச் 11

தென் இலங்கையில் ரத்துச் செய்யப்பட்டுள்ள இரவு பஸ் சேவைகளை உடனே ஆரம்பிக்கும்படி போக்குவத்ரது அமைச்சர் விஜேபால மெண்டிஸ் இ. போ. ச டிப்போ முகாமையாளர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

அமைதியின்மை காரணமாக இப்பஸ் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன என்பது தெரிந்ததே. (இ எ)

### செய்திச் சாரம்

## சீனி விலை குறையலாம்

கொழும்பு. மார்ச் 11

சீனியின் விலையை அரசு குறைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக சந்தையில் சீனி விலை குறைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் உள்நாட்டிலும் சீனியின் விலையைக் குறைப்பது பற்றி அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் சீனி இறக்குமதியாளர்களுடன் பேச்சுக்களை இவ்வாரத்தில் நடத்த இருக்கிறார். (இ - எ)

## கல்கத்துக்கு வரதர் நன்றி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

அமைதிப்படையினர் ஆற்றிய சேவைகளுக்கு நன்றி தெரிவித்து வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் அமைதிப்படைத் தளபதி ஜெனரல் எ. எஸ். கல்கத்துக்கு கடிதம் அனுப்பி வைத்திருக்கிறார்.

இக்கடிதம் கடந்த வெள்ளிக்கிழமை ஜெனரல் கல்கத்திடம் கையளிக்கப்பட்டது. (ஓ-எ)

## அறிவித்தல்

எமது ஒன்றியத்தின் விருந்துபசார வைபவம் திட்டமிட்டபடி 11 - 03 - 90 [ஞாயிற்றுக்கிழமை] இன்று நடைபெறும் என்பதை சகல பாடசாலைகளுக்கும் அறியத்தருகின்றோம்.

செயலாளர்:
உயர்தர மாணவர் ஒன்றியம்,
யாழ். இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[11985]

## மரண அறிவித்தல்கள்

### க. வாமதேவா

327, நாவலர் வீதி, நல்லூர் வாசியான திருவாளர் கனகசபை வாமதேவா கொழும்பில் காலமானார்.

இவர் சொர்ணாம்பிகையின் கணவரும் பரமேந்திரன், தியாகேந்திரன், சந்திரவதனி, மதிவதனி, குமரேந்திரன் ஆகியோரின் தந்தையாரும், நவரத்தினராஜா (அண்ணன்), சௌந்தரராஜா, நீலா, நந்தினி ஆகியோரின் மாமனாரும் இரத்தினசபாபதி, நாகேந்திரா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற ஸ்ரீ பத்மநாதன், என் சம்பந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய ஒழுங்குகள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பரமேஸ்வரன்,
ஆர். என். வரேந்திரன்.

327, நாவலர் வீதி,
நல்லூர்.

### திருமதி பொன்னையா மீனாட்சி

உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி பொன்னையா மீனாட்சி அவர்கள் 9 3. 90 இல் காலமானார்

இவர் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், நிற்சிங்கப்பிள்ளையின் சகோதரியும், திருமதி சி. பொன்னம்மா திருமதி சி. தங்கநாச்சி, திருமதி மு. தங்கமுத்து, திருமதி அ. சேதுப்பிள்ளை; வேலாயுதம் [ஆசிரியர் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி] ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற சின்னத்துரை, காலஞ்சென்ற சிவக்கொழுந்து, முத்துவேல், அரியநாயகம்[மின் அத்தியட்சகர் வல்வெட்டித் துறை] திருமதி வே. தங்கரத்தினம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் உடுப்பிட்டி மயானத்தில் 10. 3. 90 இல் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
பொ. வேலாயுதம்

துரைபொன் வாசம்,
சந்நிதி வீதி,
உடுப்பிட்டி.

(2762)

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் பரமேஸ்வரன்

யாழ்ப்பாணம் தட்டா தெருவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சோ. பரமேஸ்வரன் 8ஆம் திகதி அகால மரணமானார்.

இவர் யோகம்மாவின் அன்புக் கணவரும். பாலச்சந்திரன் (டென்மார்க்), ரகுநாதன் (சுவிற்சலாந்து), மாலினி (விவேகானந்த மகா வித்தியாலயம், கொழும்பு), ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜனி [டென்மார்க்] யின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
கு ஸ்ரீகாந்தா

7ஆம் கட்டை,
உடுப்பிட்டி.

[2770)

### கதிரேசு வல்லிபுரம்

(அச்சுவேலி]

அச்சுவேலி தோப்பைச் சேர்ந்த சிலோன் தியேட்டேஸ் முன்னாள் பிரதம காசாளர் கதிரேசு வல்லிபுரம் 10- 03- 90 இல் காலமானார். இவர் மகேஸ்வரியின் அன்புக்கணவரும், இந்துமதி, நரேந்திரன் (U. K), திலகவதி (கனடா), முருகேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவீந்திரன் (இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம்), தாரிணி, கமலநாதன் (கனடா), ஆகியோரின் மாமனாரும், ரஜீவ், மிதிலா, சிந்துஜா, ஆகியோரின் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
த. ரவீந்திரன்

இராஜ வீதி,
தோப்பு,
அச்சுவேலி.

(12027)

### பொன்னம்பலம் நடேசன்

(கணக்குப்பிள்ளை)

(K. P)

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நடேசன் 9- 3- 90 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் செல்லம்மாவின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்ற தியாகராசா கதிராசிப்பிள்ளையின் அன்புக்குப் பாத்திரமான மருமகனும், புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், தணிகாசலம், வசீகரன், கஜபதி, உத்திரகுமார், உத்திரராசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராசரத்தினம், (திருமலை) கைலாசபிள்ளை சரோஜினி (ஆனைப்பந்தி), Dr. சந்திரசேகரம் (சேனைக் குடியிருப்பு), சொர்ணலிங்கம் இந்திராணி (வண்ணார் பண்ணை), குமரகுரு சூரியபகவதி (உடுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கைலாசபிள்ளை, சொர்ணலிங்கம், குமரகுரு, தாட்சாயினி, சகுந்தலா தேவி, பூமணி, கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சோபனா உரிமையாளர்களின் சிறிய தந்தையும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 11 - 3 – 90 ஞாயிற்றுக்கிழமை மாலை புங்குடுதீவு நாகுண்டமனை மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புங்குடுதீவு.

தகவல்
மைத்துனர்
ச. குமரகுரு

(119g8)

### திருமதி கௌரியம்பாள் இராசகுலசேகரம்

நவாலி வடக்கைச் சேர்ந்த திருமதி கௌரியம்பாள் இராஜகுலசேகரம் அவர்கள் 9-3-90 (வெள்ளிக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார் இவர் காலம் சென்ற உயர் திரு இராஜகுலசேகரம் (முன்னாள் V. C. Chairman) மானிப்பாய் அவர்களின் அன்பு மனைவியும், பரராஜசிங்கம் (இளைப்பாறிய Grindlays Bank முகாமையாளர்), இராஜகுலசூரியர் (ஆசிரியர் மெமோறியல் ஆங்கில பாடசாலை-மானிப்பாய்), காலம் சென்ற விஜயகுலசிங்கம், கௌரிமனோகரி, அமரகுலசிங்கம், குமாரகுலசிங்கம் (Nothern Industries (P. v t)Ltd) ஜெயகுலசிங்கம் (Canada), தேவிமனோகரி ஆகியோரின் அருமைத் தாயாரும் இராஜேஸ்வரி, கமலாவதி, யோகாம்பிகை (ஆசிரியை யூனியன் கல்லூரி தெல்லிப்பளை), மகாதேவன் (Lanka Cement Ltd. K.K. S) விமலாதேவி, பவானி இந்தியா], நாகேஸ்வரன் (உரிமையாளர் தம்பிப்பிள்ளை ஸ்ரோஸ்-வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், P இராஜகுலசேகரம், கௌரிஸ்வரி, இராஜலஷ்மி, சுஜரூபன், சிவபாலன், அருள்தேவன், லலிதாம்பிகை, ஞானாம்பிகை, J. இராஜகுலசேசரம், அனுஷியா, பிரியதர்ஷினி, யதீஸ்வரன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேத்தியும், கணபதிப்பிள்ளை, சண்முகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவர்.

அன்னாரின் பூதவுடல் 11-03-90 (ஞாயிற்றுக்கிழமை) இன்று காலை 9 மணி அளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மடத்தடி ஒழுங்கை,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(2769)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11- 03 – 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org